உ

அகில இலங்கைச் சித்தாயுள்வேத
வைத்திய சங்க வெளியீடு—2.

அநுபவமுள்ள

# குடிநீர் வகைகள்

—o—

தொகுத்தவர்
வைத்தியர்ச்சாரி
திரு. ஏ. சி. இராசையா
(பதிவுபெற்ற சித்த ஆயுள்வேத வைத்தியர்)

வெளியிட்டது:
அகில இலங்கைச் சித்த
ஆயுள்வேத வைத்திய சங்கம்
யாழ்ப்பாணம்.

அகில இலங்கைச் சித்தாயுள்வேத
வைத்திய சங்க வெளியீடு—2.

பொதுசன நூலகம்
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

அநுபவமுள்ள

# குடிநீர் வகைகள்

—o—

இஃது
பிரபல வைத்தியரும்
அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்தியசங்கக் காரியதரிசியும்
தமிழாசிரியரும்,
கஸ்தூரியாரின் மருகர்
**பண்டிதர். க. முத்துக்குமாரு அவர்களின்**
மாணவருமாகிய
**வைத்தியாச்சாரி**
**திரு. ஏ. சி. இராசையா**
அவர்களின்
அனுபவத் தொகுப்பு.

பொது சன நூலகம்
20 FEB 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது]

4198 CC

மன்மத௵ ஆவணிமீ. விலை ரூபா 1-50

யாழ்ப்பாணம்.

# பதிப்புரை

தாய்நாட்டை யனுசரித்து, சேய்நாடான ஈழத்திலும் பல நூற்றாண்டுகளுக்கு முன் சுதேசவைத்தியம் நல்ல வளர்ச்சி யடைந்திருந்தது. அந்நாட் பல புதிய புதிய வைத்திய நூல்களும் நம் நாட்டிலிருந்தெழுந்தன. பின்னர் அந்நியராட்சியில் அவ்வளர்ச்சி தடையுற்றிருந்தும், பல சிறந்த வைத்தியர்களால் அவ்வரிய அநுபவ முறைகள் பேணப்பெற்று குரு பரம்பரையாய் வந்தோரால் மாத்திரம் அறியப் பெற்றிருந்தன.

இவ்வித சிகிச்சை முறைகளையும் மருந்துகளையும் வெளியிட்டாலே சுதேச வைத்தியம் முன்னேற வழி பிறக்குமென, சுதந்திர அரசாங்கம் வெளியிட்டது. ஆனால் அவற்றைப் பேணி வைத்திருந்த வைத்திய நண்பர்கள் அவைகளை வெளியிட முன்வரவில்லை.

இற்றைக்கு அறுபது வருடகாலத்துள் ஈழத்தில் வாழ்ந்த பிரபல வைத்தியர்களுள் வண்ணார்பண்ணை கஸ்தூரியார் வேலுப்பிள்ளை, அவரது மாணவர் கந்தர்மடம் சபாபதி கந்தையா, சுளிபுரம் பெரிய பரிகாரியார், வண்ணார்பண்ணை கஸ்தூரியாரின் மருகன் கதிரவேலு முத்துக்குமாரு, ஓட்டுமடம் இராமுப்பிள்ளையார், இணுவில் நடராசக்குருக்கள், நாயன்மார்கட்டு வெ. சிவசுப்பிரமணியம், ஆவரங்கால் தாமோதரம் பிள்ளை, வண்ணார்பண்ணை கஸ்தூரியாரின் பேரன் மு. கதிரவேற்பிள்ளை, என்பவர்கள் சிறந்தோராவர். கதிரவேலு முத்துக்குமாரு அவர்களின் சிஷ்ய பரம்பரையில் வந்தவரே இந்நூலாசிரியர் வைத்தியாச்சாரி திரு. ஏ. சி. இராசையா அவர்கள். இதுவரை மறைவிலிருந்த அரிய பெரிய அனுபவக் குடிநீர் முறைகளை வெளியிட்ட பெருமை இந்நூலாசிரியரையே சாரும்.

முன்னர் கிருமிதோஷம் என்னும் நூலை வெளியிட்டுப் பெருந்தருமத்தைச் செய்தார்கள். இப்போ இந்நூலை வெளியிட முன்வந்தது சுதேசவைத்தியம் வளர்ச்சியடையும் வழியிற் பிரவேசித்திருப்பதற்கு ஓர் அறிகுறியாகும்.

ஒவ்வொரு வைத்தியர்களும் இந்நூலினைத் தங்கள் கைவசம் ஓர் கைநூலாக வைத்துக்கொள்வதால் தொழிலிற் சித்தியும் புகழும் பெறுவார்கள் என்பது உறுதி.

பதிப்பாளர்

அ. இ. சி. ஆ. வை. சங்கம்.
யாழ்ப்பாணம். 3-9-55.

# விஷய அட்டவணை




| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கெற்பணிகளுக்கு எம்மாதத்திலாயினும் தீட்டுப்பட்டால் | 1 |
| 2. | கெற்பணி சுரக்குடிநீர் | 2 |
| 3. | கெற்பணி சுரத்துக்குக் குடிநீர் | ” |
| 4. | கெற்பணி முறைச் சுரத்துக்கு | ” |
| 5. | கெற்பணி சுரம் இருமலுக்கு | ” |
| 6. | கெற்பணிக்கு 7-ம், 8-ம் மாதங்களில் சுரம் இருமல் வந்தால் | ” |
| 7. | கெற்பணிக்கு 9-ம்,10-ம் மாதங்கள்வரை சுகபேதிக்குடிநீர் | 3 |
| 8. | கெற்பணி மலசல அடைப்புக்கு | ” |
| 9. | கெற்பணி சல அடைப்புக்கு | ” |
| 10. | கெற்பணி வீக்கக் குடிநீர் | ” |
| 11. | ” ” ” | 4 |
| 12. | ” ” ” | ” |
| 13. | கெற்பணி வயிற்றவியற் சுரத்துக்கு | 5 |
| 14. | பிரசவக் குடிநீர் | ” |
| 15. | சுகப்பிரசவக் குடிநீர் | ” |
| 16. | பெற்றபின் தீட்டுப்படாவிட்டாற் கோப்பிக் கஷாயம் | ” |
| 17. | பெற்றபின் 4-ம், 5-ம் நாட்களில் வயிற்றாலே போக்காட்ட | ” |
| 18. | பெற்றபின் கொதி வந்தால் | 6 |
| 19. | பெற்றபின் தீட்டுப்படாது கொதி வந்தால் | ” |
| 20. | ” ” ” ” | ” |
| 21. | காயாசுவாதக் குடிநீர்—1 | ” |
| 22. | ” ” 2 | ” |
| 23. | ” ” 3 | 7 |
| 24. | ” ” | ” |
| 25. | ” ” | ” |
| 26. | விஷசுரக் குடிநீர் (பெரியது) | 8 |
| 27. | குலைப்பனோடு வரும் விஷசுரக் குடிநீர் | ” |
| 28. | குலைப்பன் காச்சலுக்கு | ” |
| 29. | தினச்சுரம் முறைச்சுரம் 3-ம் 4-ம் முறைச்சுரங்களுக்கு | 9 |
| 30. | விஷசுரக் குடிநீர் (சிறியது) | ” |
| 31. | சன்னிவாதசுரக் குடிநீர் | ” |
| 32. | அதிசார சன்னிவாதச் சுரக்குடிநீர் | 10 |
| 33. | சன்னிவாதசுரக் குடிநீர் | ” |
| 34. | சுவாதசன்னிக் குடிநீர் | ” |
| 35. | சிறுவர் கிரந்திச் சுவாதக் குடிநீர் | 11 |
| 36. | தொய்வுச் சுவாதக் குடிநீர் | ” |
| 37. | சிறுவர் கிரந்தி அதிசாரம் கிருணிக் குடிநீர் | ” |
| 38. | சிறுவர் வலிசுரக் குடிநீர் | 12 |
| 39. | சிறுவர் கரப்பன் குடிநீர் | ” |
| 40. | சிறுவர் மாந்தக்கழிச்சல் சுரக்குடிநீர் | ” |
| 41. | சிறுவர் இரத்தாதிசாரம் இரத்தக்கிருணி சுரக்குடிநீர் | 13 |
| 42. | சிறுவர் விஷவாத கரப்பன் குடிநீர் | ” |
| 43. | சிறுவர் சிரங்கு கரப்பன் உள்ளடங்கி வீங்குசுரக்குடிநீர் | ” |
| 44. | வீங்குசுரக் குடிநீர் | ” |
| 45. | சிறுபிள்ளை கொள்ளிக்கரப்பன் குடிநீர் | 14 |
| 46. | சிறுவர் சின்னமுத்து, பறவை, பொக்குளிப்பான் அம்மை சுரக்குடிநீர் | ” |
| 47. | சின்னமுத்து, பொக்குளிப்பான், வைசூரியில் வரும் கடினசுரக் குடிநீர் | 15 |
| 48. | சின்னமுத்து, பொக்குளிப்பான், வைசூரி வந்து முழுகியபின் சளி வயிற்றவியல் சுரக்குடிநீர் | ” |
| 49. | சின்னமுத்தின் பின்வரும் சுவாதசன்னிக் குடிநீர் | 16 |
| 50. | சன்னிவாதசுரப் பெரிய குடிநீர் | ” |
| 51. | சன்னிவாதசுரக் குடிநீர் | ” |
| 52. | சன்னிவாத சுரத்திலே இரத்தமுடைத்தால் | 17 |
| 53. | சன்னிவாக சுரத்தின்பின் நிற்கும் விஷசுரத்துக்கு | ” |
| 54. | நாட்பட நிற்கும் சன்னிச்சுர விஷசுர சஞ்சீவிக்குடிநீர் | ” |
| 55. | நாட்பட்ட சுரங்களுக்குப் பொட்டளிக் கஷாயம் | 18 |
| 56. | பெரிய குடிநீர் | ” |
| 57. | கொள்ளைச் சுரக்குடிநீர் | 19 |
| 58. | ” ” | 20 |
| 59. | விடாச்சுரக் குடிநீர் | ” |
| 60. | சுரம் நாவரட்சி வேர்வை விக்கல் கழிச்சல் தோஷக்குடிநீர் | ” |
| 61. | தொய்வு, இருமல் சுரக்குடிநீர் | ” |
| 62. | வாயவியற் குடிநீர் | 21 |
| 63. | ” ” | ” |

64. சுரத்தில் வரும் சலக்கடுப்பு எரிவுக்குக் குடிநீர் 21
65. சுகபேதிக் குடிநீர் ”
66. வாதசுரக் குடிநீர் ”
67. வாதக் குடிநீர் 22
68. ” ” ”
69. ” ” 23
70. வாதத்திற்குப் பிரம்புமூலக் கஷாயம் ”
71. ” ” ” ”
72. சுரோணிதவாதக் குடிநீர் 24
73. வாதப்பிடிப்பு அஸியற் சுரத்துக்கு ”
74. வாதப்பிடிப்பு வயிற்றுக்கழிச்சல் சுரத்துக்கு ”
75. செங்கண்மாரிக் குடிநீர் 25
76. ” ” ”
77. ” ” ”
78. ” ” ”
79. பஞ்சதாரைக் குடிநீர் 26
80. வாதபித்த குளிர்சுரக் குடிநீர் ”
81. வாதபித்தசுரக் குடிநீர் ”
82. கிருமிச்சுரக் குடிநீர் ”
83. வயிற்றுளைவு கிருணி அதிசாரக் குடிநீர் 27
84. சண்டமாருதக் கருக்குக் குடிநீர் ”
85. சுர் அதிசாரக் குடிநீர் ”
86. உவாந்தி விக்கலுக்குக் குடிநீர் 28
87. விக்கலுக்கு ”
88. மாருத சத்திக்கு ”
89. சத்தி ஓங்காளத்துக்கு ”
90. விக்கலுக்கு ”
91. உவாந்திக்கு ”
92. வாயால் இரத்தம் போவதற்கு ”
93. வாயால் இரத்தம் போகும் இரத்தபித்தத்திற்கு ”
94. இரத்தபித்தக் குடிநீர் 29
95. இரத்தபித்தரோக உழலைக்கு ”
96. இரத்தபித்த ரோகத்தில் வயிற்றாலே போக ”
97. இரத்தபித்த ரோகத்திற் கூடிய சுரம் இருந்தால் ”



98. இரத்தபித்த ரோகத்தில் நித்திரையில் முட்டுண்டானால் 29
99. இரத்தபித்தம் இரத்த மூலத்துக்கு ”
100. சுரம் வாய்வுடன் கூடிய கசத்துக்கு ”
101. கசம், இருமல் சுரத்துக்கு 30
102. கசம், இருமல், வயிற்றாலே போவதற்கு ”
103. சுரம், இருமலுக்கு ”
104. ” ” ”
105. சுரம், இருமல் கசத்துக்கு ”
106. சுரம் இருமல் தொண்டையால் இரத்தம் போவதற்கு 31
107. கடியசுரம் கசரோகத்துக்கு க்ஷயக்கிருமிகொல்லிப் பொட்டளி ”
108. க்ஷயக்கிருமி கொல்லி ”
109. கசத்தில் இரத்தங் கக்கினால் ”
110. ” ” ” ”
111. இருமல் தொய்வுக்குக் கஷாயம் ”
112. இருமலுக்கு ”
113. சுரம் தொய்வுக்கு ”
114. பெரிய ஈரவுள்ளிக் குடிநீர் ”
115. மந்தாரகாசக் குடிநீர் 33
116. பித்தகாசக் குடிநீர் ”
117. சலக்கடுப்புக் குடிநீர் ”
118. நீர்க்கடுப்பு பிரமியம் இரத்தப்பிரமியம் கூடுவிழ ”
119. சல அடைப்புக்கு 34
120. மூத்திரக் கிரந்திச் சல அடைப்புக் குடிநீர் ”
121. மதுமேகசுரக் குடிநீர் 35
122. ” ” ”
123. சலரோகிகள் விரேசனக் குடிநீர் ”
124. சலரோகிகள் வயிற்றெரிவுக் குடிநீர் 36
125. சலரோகக் குடிநீர் ”
126. நீரிழிவுக் குடிநீர் 37
127. பெரும்பாட்டுக் குடிநீர் ”
128. சுரம் இல்லாத பெரும்பாட்டுக்கு ”
129. பெரும்பாட்டுக்கு 38
130. வீக்கக் குடிநீர் ”

| | | |
|---|---|---|
| 131. | வீக்கத்துக்குக் கோசலக் குடிநீர் | 39 |
| 132. | வீங்கு கரப்பன் குடிநீர் | ,, |
| 133. | வீக்கக் குடிநீர் | ,, |
| 134. | சகல வீக்கத்துக்கும் பெரிய குடிநீர் | ,, |
| 135. | வீக்கத்துக்குக் குடிநீர் | 40 |
| 136. | பாண்டு வீக்க மண்டூரக் குடிநீர் | ,, |


---


கிடைக்குமிடம் :

அ. இ. சி. ஆ. வைத்திய சங்கக் காரியாலயம்,
259, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


# வைத்திய வாய்பாடு

## முகத்தலளவை

தெரிவுறு முரிகாற் கோத்து சேர்பதக் கெட்டுக் கோத்து
பரிவுறு குறுணி நாலு கோத்தெனப் பகர லாகும்
தெரிவுறு நாளி யென்பர் சேரொரு கோத்திற் பாதி
உரியதோ ருழக்குக் காலிற் பாதியென் றுரைத்தார் மேலோர்.

| | | |
|---|---|---|
| 5 செவிடு | — | 1 ஆழாக்கு |
| 2 ஆழாக்கு | — | 1 உழக்கு |
| 2 உழக்கு | — | 1 உரி |
| 2 உரி | — | 1 நாளி |
| 2 நாளி | — | 1 படி |
| 2 படி | — | 1 இடங்களி |
| 4 படி | — | 1 குறுணி |
| 8 படி | — | 1 பதக்கு அல்லது மரக்கால் |
| 16 படி | — | 1 தூணி |
| 48 படி | — | 1 கலம் |
| 168 படி | — | 1 கோட்டை 21 மரக்கால் |

| | | |
|---|---|---|
| 1 ஆழாக்கு | 2 பலம் | $2\frac{1}{2}$ அவு. |
| 1 உழக்கு | 4 பலம் | 5 அவு. |
| 1 உரி | 8 பலம் | 10 அவு. |
| 1 நாளி | 16 பலம் | 20 அவு. |
| 1 போத்தல் | $19\frac{1}{5}$ பலம் | 24 அவு. |
| 1 படி | 32 பலம் | 40 அவு. |

| | |
|---|---|
| 8 பலம் | 1 கச்சாச்சேர் |
| 16 பலம் | 1 நாளி |
| 24 பலம் | 1 பக்காச்சேர் |
| 32 பலம் | 1 படி |
| 40 பலம் | 1 வீசை |
| 8 வீசை | 1 மணு (முவுண்ட்) |

4198 c.c

## நிறுத்தலளவை

| | |
|---|---|
| 4 செஞ்சாலி நெல் அல்லது<br>4 பச்சைப்பயறு | 1 குன்றி |
| $3\frac{3}{4}$ குன்றி | — 1 பணவிடை |
| 8 குன்றி | — 1 மாஷா |
| 32 குன்றி | — 1 வராகன் |
| 40 குன்றி | — 1 கழஞ்சு |
| 9 பணவிடை | — 1 வராகன் |
| $10\frac{2}{3}$ பணவிடை<br>$1\frac{1}{4}$ வராகன் | — 1 கழஞ்சு |
| 10 வராகன்<br>8 கழஞ்சு | — 1 பலம் |
| 32 பலம் | — 1 படி |
| 1 படி | — $2\frac{1}{2}$ இரு. |
| 1 வீசை | — 3 இரு. 2 அவு. |
| 8 வீசை | — 1 மணு=25 இரு. |
| 20 மவுண்ட் | — 1 பாரம் அல். கண்டி |
| 50 பலம் | — 1 தொக்கு அல்லது [தூக்கு |
| 100 பலம் | — 1 துலாம் 8 இரு. |
| 1 தோலா | — 1 ரூபாவிடை $2\frac{1}{2}$ கழ. |
| 3 தோலா | — 1 பலம். |
| 1 குன்றி | — 2 கிறேயின் |
| 1 மஞ்சாடி | — 4 கிறேயின் |
| 1 கழஞ்சு | — 72 கிறேயின் |

## தமிழ் இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| 1 | — | க |
| $\frac{3}{4}$ | — | ெத, ளு. |
| $\frac{1}{2}$ | — | ௨, இ. |
| $\frac{1}{4}$ | — | வ |
| $\frac{1}{8}$ | — | ஞ |
| $\frac{1}{16}$ | — | மா |

# அனுபவமுள்ள குடிநீர் வகைகள்

வணக்கம்

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.

மக்களுறை முப்பத்து மூன்று என்பர். இவற்றிலே குடிநீரும் ஒருவகை. குடிநீர் கஷாயம் என்றுஞ் சொல்லப்படும். யாவரும் எப்போதும் எவ்விடத்தும் நினைத்தவுடன் செய்யக்கூடிய மருந்து குடிநீர் ஒன்றுதான். குணத்தில் உயர்ந்ததும், எவ்வித தீமைவருவியாததும், நோய்போக்குவதில் நிகரற்றதும், செலவுச் சுருக்கமானதும் குடிநீர்வகைகளே. எப்பருவத்தினரது நோய்களுக்குப் பொருத்தமானதும் பாட்டிமாருக்குப் பெயர்பெற்ற வைத்தியர்களோடொத்த மரியாதையைத் தேடிக்கொடுத்ததும் இக் குடிநீர் மருந்துகள்தான். மருந்தாற் பயனில்லை எவ்வித சிகிச்சைக்கும் இடமில்லை என எண்ணிக் கைவிடப்பட்ட எத்தனையோ கஷ்டமான நோய்களை இக்குடிநீர் மருந்துகள் ஆச்சரியப்படத்தக்கவிதமாய்க் குணப்படுத்தியுள்ளன வென்றால் குடிநீர்மருந்துகளுக்கு நிகர் யாதுமுண்டா? இங்கு கூறப்படும் குடிநீர்கள் நம்மூதாதையர்களான ஸ்ரீமான்கள்: கஸ்தூரியார் முத்துக்குமாரு, இராமுப்பிள்ளையார், இணுவில் நடராசாக்குருக்கள், நாயன்மார்கட்டு சிவசுப்பிரமணியம், ஆவரங்கால் தாமோதரம்பிள்ளை, கதிரவேற்பிள்ளை முதலிய வைத்தியர்களால் அநுபவமாய்க் கையாளப்பட்டுவந்தன. ஆதலின் நாமொவ்வொருவரும் அவைகளை அறிந்திருப்பதும் அவர்கள் எங்களுக்குத் தேடித்தந்த இத் திரவியத்தை அழியவிடாது காப்பாற்றுவதும் அதை யாவருக்கும் பிரயோசனப்படச் செய்வதும் எங்கள் ஒவ்வொருவரின் கடமையுமாகும். அக் குடிநீர்கள் பின்வருமாறு:-

(1) கெற்பனிகளுக்கு எம்மாதத்திலாயினும் தீட்டுப்பட்டால்:- நெய்தற்கிழங்கு கழஞ்சு 8; சந்தணச்சீவல் கழஞ்சு 4; தாமரையல்லி கழஞ்சு 2. ஒருபடி நீர்விட்டு நாலொன்றாக வற்றவைத்து நேரம் இரண்டு அவுன்ஸ்வீதம் பத்துச்சொட்டுத் தேன் கூட்டிக் கொடுக்கவும். இவ்விதம் நாள் நாலுமுறைகொடுத்து ஆளைப்படுக்கையில் வைக்கவும். குறையாவிடில் மகாஏலாதி கூட்டிக்கொடுக்கவும்.

## கெற்பனி சுரத்துக்குக் குடிநீர்

கெற்பந்தா னுற்றமாதர் கிளர்சுர முற்றுலெந்தப்
பொற்புறு மதியானுலும் புகன்றிடு குடிநீர்கேண்மோ
நற்சிறு முட்டிபோரா முட்டிநன் னுரிகோரை
யற்புதச் சீந்தில்சந்த மமரர்கள் தாருவெட்டி

வெட்டியோ டிலாமிச்சம்வேர் விளங்கிடு பெருநன்னுரி
மட்டில்லா மதுரஞ்சுக்கு வளர்நிலப் பனையினேடு
அட்டியில் லாவகைக்கே யாமிரு கழஞ்சுகொண்டு
புட்கர மிரண்டுநாளி பெய்துநா லொன்றுயட்டே.

அட்டிடு கஷாயந்தன்னி லளவதாய்ப் பிரசமிட்டு
மட்டுட னருந்தத்தீரும் மாருது நிற்கிலீதி
விட்டிடு மகாயேலாதி யியல்கோ ரோசினையின்மாத்ரை
செட்டியார் மிருதசஞ் சீவியி லொன்றைத்தானே.

## கெற்பனி சுரத்துக்குக் குடிநீர்.

சீந்தில், சிறுகாஞ்சோன்றிவேர், பற்படாகம், வட்டுவேர், கண்டங்கத்தரிவேர், நிலவேம்பு, முத்தற்காசு, சுக்கு, சிறுதேக்கு, கோட்டம், திற்பலிமூலம் வகை கழ. 2. 2 படி நீர்விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து நேரம் 2 அவு. நாள் 4 முறை கொடுக்கவும். தேவையாயின் மகாஏலாதி கூட்டிக்கொடுக்கவும்.

தீரும்வியாதி:— தலையிடி, குலைப்பன் காய்ச்சல், தேகநோ, அன்னத்துவேஷம் தீரும்.

கெற்பனி முறைச் சுரத்துக்கு:— சீந்தில், பேய்ப்புடல், முத்தற்காசு, பற்படாகம், சுக்கு வகை கழ 2. 2 படி நீர்விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து மகா ஏலாதி கூட்டிக் கொடுக்கவும்.

கெற்பனி சுரம் இருமலுக்கு:— நன்னுரிவேர், சீந்தில், சிற்றமட்டிவேர், பேரமட்டிவேர், இலாமிச்சு, வெட்டிவேர், தேவதாரம், முத்தற்காசு, நிலப்பனை, மதுரம், சுக்கு வகை கழ. 2. 2 படி நீர்விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்துக்கொடுக்கவும். தேவையாயின் மகா ஏலாதி, கெற்பனி வெட்டுமாறன்குளிகை இவைகளிலொன்றைக் கூட்டித் தேன் சேர்த்துக் கொடுக்கவும். வயிற்றுற் போவதுகுறைவாயின் தேன் தேவையில்லை.

கெற்பனிக்கு 7-ம், 8-ம் மாதங்களில் சுரம், இருமல் வந்தால்: தாமரைவளையம், பேய்ப்புடல், வேப்பம்பட்டை, இலாமிச்சு, முத்



தற்காசு, இருவேலி, மிளகு, சுக்கு, வெட்பாலையரிசி, கடுகுரோகணி தேவதாரம், கடுக்காய், நெல்லிவற்றல், சந்தணம் வகை கழ 1. 2 படி நீர்விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து நேரம் 2 அவு. வீதம் நாள் 4 முறை கொடுக்கவும். குணமில்லையேல் மகா ஏலாதி, கஸ்தூரி, மிருத்தியாதி, சுராசசேகரவடிவு முதலாங் குளிகைகளிலொன்றைக் கூட்டிக்கொள்க.

குறிப்பு:- வயிற்றுற்போகத் தேவையில்லையாயின் கடுகுரோகணி கடுக்காயை நீக்குக.

தீரும் வியாதி:- சுரம், இருமல், மூச்சு, தாகம், கண்குத்து, உச்சிக்குத்து, மெல்லிய வீக்கம் தீரும்.

## கெற்பனிகளுக்கு 9-ம், 10-ம் மாதங்கள் வரை சுகபேதிக் குடிநீர்

கடுகுரோகணி, கருஞ்சீரகம், இஞ்சி வகை கழ. 2. பிரமி, ஈரவெங்காயம், சூரத்தாவரையிலை, ரோசாப்பூ, கற்றாளஞ் சருகு, கடுக்காய்த்தோல் வகை பிடி 1. (அல்லது 4 கழஞ்சு) $1\frac{1}{2}$ படி நீர்விட்டு $\frac{1}{8}$ ஆக வற்றவைத்து நேரம் 4 அவு. தொடங்கி 6 அவு. வரை பனங்கட்டி கூட்டிக் குடிக்கவும்.

கெற்பனி மலசல அடைப்புக்கு:- நிலபாவலிலை, $1\frac{1}{2}$ பிடி, உள்ளி, மிளகு வகை கழஞ்சு 2. 1 படி நீர் விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்துப் பனங்கட்டி கூட்டிக் குடிக்கவும். பொரித்த பொரிகாரம், பேன்பிடி கூட்டவும்.

## கெற்பனி சல அடைப்பிற்கு

மங்காத குழன்மடவீர் சொல்லக் கேளீர்
மகா கெற்ப வதியார்க்கு நீரடைத்தால்
தங்குகின்ற விருவாய்வுங் கட்டிக் கொள்ளும்
தாரணியில் மங்கையர்கள் சகிக்க மாட்டார்
வெங்காரஞ் சவுக்காரஞ் சீனக் காரம்
வெண்மதியா மிந்துப்பு வெதுப்பித் தூளாய்
சிங்கார விளநீரிற் கொள்ளும் போது
சிக்காது மலசலங்கள் திண்ணந் தானே.

குறிப்பு:- செவ்விளநீரைத் தோல்சீவியவித்துக் கொள்ளவும் அல்லது இளநீரை அரைவாசியாக வற்றவைத்து எடுத்துக்கொள்ளவும்.

## கெற்பனி வீக்கக் குடிநீர்

பிரமி, வல்லாரை, சுரையிலை, முட்கீரை, வீளி, சிறுகாஞ்சோன்றி, தூதுவளை, திரந்திகள் நாயன், விட்டுணுகிராந்தி, நீர்முள்ளி, நிலபாவல். இவை இலை வகை பிடி 1. உலுவா, மதுரம்,

திற்பலி, உள்ளி, கடுக்காய், மிளகு, கற்கடகசிங்கி, கடுகுரோகணி வகை கழ. 1. செங்கத்தாரி, வட்டு, தூதுவளை, ஆடாதோடை, கண்டங்கத்தரி, சிறுநெரிஞ்சில் இவை வேர்வகை கழ 2. 6 படி நீர் விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து நேரம் 2 - 3 அவு. நாள் 4 முறை கொடுக்கவும். தேவையாயின் இராசஏலாதி, மிருதசஞ்சீவி முதலியவைகளிலொன்றைக் கொடுக்கலாம்.

**கெற்பனி வீக்கக் குடிநீர்:-** பிரமி, வல்லாரை, சுரையிலை, நீர்முள்ளி, வெளவிலொட்டி, சிறுநெரிஞ்சில், கிரந்திகள்நாயன், தூதுவளை, முட்கீரை, நிலபாவல் இவை இலை வகை பிடி 1. கடுக்காய், கடுகுரோகணி, கருஞ்சீரகம், இந்துப்பு, சுக்கு, மல்லி, வெட்டிவேர், இலாமிச்சு வகை கழ. 1. 4 படி நீர்விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து நேரம் 2 - $2\frac{1}{2}$ அவு. நாள் 4 முறை குடிக்கவும்.

**கெற்பனி வீக்கக் குடிநீர்:-** வீழி, பிரமி, பீச்சுவிளாத்தி, வெளவிலொட்டி, கையான்தகரை, நாயுருவி, சிறுகாஞ்சோன்றி, சுரை, நீர்முள்ளி, கற்பூரவள்ளி, எருமைமுல்லை, கறி முல்லை, பாண்டவர் முல்லை. இவை இலைவகை பிடி 1. நாயுருவிவேர், இயங்கம்வேர், வட்டுவேர், கொன்றைப்பட்டை வகை பிடி 1. அல்லது வகை கழ 4. சுக்கு, மல்லி, கருஞ்சீரகம், கடுகுரோகணி, ஈரவெண்காயம் சுத்திசெய்த கிட்டம், சுத்தித்த அரப்பொடி வகை கழ. 2. 6 படி நீர்விட்டுக் $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து நேரம் 2 - $2\frac{1}{2}$ அவு. வீதம் பொரிகாரம் பொரித்து மேற்பொடிபோட்டுக் குடிக்கவும். தேவையாயின் இராசஏலாதி சேர்த்துக் குடிக்கவும்.

**பத்தியம்:-** வீக்கங்களுக்கு உப்பு ஆகாது. உப்புச் சாப்பிட்டாற் சலம் பிரியமாட்டாது.

குறிப்பு:- கெற்பனிகள் வீக்கம் வைர வீக்கம், மெது வீக்கம் என இருவகை. மெதுவீக்கம் மருந்துக்கு வசப்படும். வைர வீக்கத்திலும் சில மருந்துக்குப் படியும். சில பிரசவம் வரைக்கும் இருந்து பிள்ளைப்பெற்றதும் கலைந்துவிடும். சில பிள்ளைபிறந்தாலும் போகமாட்டாது. இவைகளுள் கெற்பமாயிருக்கும்போது மருந்துக்கு அதிகம் குணம் ஏற்படாவிட்டால் மருந்தைத் தொடர்ந்து கொடுத்துவருதல் கூடாது. 10 - 15 நாட்களின் மேலும் மருந்து பாவிக்கவேண்டியிருந்தால் இடையில் ஒரு கிழமை விட்டுப் பின் குடிப்பது நல்லது. கடினவீக்கங்கள் குறையக் கெற்பமழிதலுங் கூடும். வீக்கம் வந்தால் தானாகவும் கெற்பம் அழிவது வழக்கம். 6 மாதத்தின் மேல் வரும் வீக்கங்கள் பிரசவம் வருமளவும் நிற்கவுங் கூடும். இவ்வித வீக்கங்கள் கருப்பை அவ்விடத்துள்ள பெரிய ரத்தநாளத்தை அமுத்துவதாலுண்டாகின்றன. பிள்ளை பிறந்ததும் 2 அல்லது 3 நாட்களில் வீக்கம் வடிந்துவிடும்.



யாழ்ப்பாணம்.

**கெற்பனி வயிற்றவியற் சுரம்:-** சிற்றமட்டி, பேரமட்டி, சீந்தில், நிலப்பனை, கோரைக்கிழங்கு, சந்தனம், வெட்டிவேர், இலாமிச்சு, தேவதாரம், ஆடாதோடை, கண்டதிற்பலி, வால்மிளகு, சிறுநாகம்பூ, மல்லி, சித்தரத்தை, அக்கரா, கறுவா, கடுகுரோகணி வகை கழ. 1. 2 படி நீர் விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து நேரம் 2 அவு. வீதம் நாள் 4 முறை குடிக்கவும் நோய் பெலத்தால் மகா ஏலாதி, இராச ஏலாதி, சுரராசசேகர வடிவு, பெரிய பூரணசந்திராதி, புன்னை வேர்க்குளிகை, வெண்காயக் குளிகைகளில் ஒன்றை தேவைக்குத் தக்கதாய்க் கொடுக்கவும்.

**பிரசவக் குடிநீர் :-** கருஞ்சீரகம், வெந்தயம், இஞ்சி, மிளகு, நற்சீரகம் வகை கழ 2. வேப்பிலைக் காம்பு, நொச்சியிலைக் காம்பு வகை பிடி 1. 1 படி நீர் விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து நேரம் 3 அவு. வீதம் $\frac{1}{2}$—$\frac{3}{4}$ மணித்தியாலத்திற்கொரு முறையாக இருமுறை கொடுக்கவும், சுகப்பிரசவமாகும். கொடி விழாவிட்டாலும் முன்போற் செய்து கொடுக்கவும்.

**சுகப்பிரசவக் குடிநீர் :-** கருஞ்சீரகம், வெந்தயம், இஞ்சி, மிளகு, நற்சீரகம், உள்ளி வகை கழ $2\frac{1}{2}$. வேப்பங் காம்பு, நொச்சிக் காம்பு, கறிமுருங்கைக் காம்பு வகை பிடி 1. 3 மாதத்திற்குட்பட்ட பெட்டைக் கோழிக்குஞ்சு ஒன்று, கோழிக்குஞ்சில் நீக்க வேண்டியவைகளை நீக்கி யாவும் ஒன்றாய்க் குத்திப்போட்டு $1\frac{1}{2}$ படி நீர்விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து நேரம் $2\frac{1}{2}$—3 அவு. வீதம் $\frac{1}{2}$ மணித்தியாலத்துக் கொருமுறை கொடுக்கவும். இராசநோக்காடுண்டாகிப் பிள்ளை பிறக்கும், கொடியும் விழும்: தேவையாயின் இக்குடிநீரில் குன்றியிடை சவ்வாது கூட்டிக் கொடுக்கவும்.

**பெற்றபின் தீட்டுப்படாவிட்டாற் கோப்பிக் கஷாயம் :-** வெள்ளையுள்ளி தோல் நீக்கி வெட்டியது கழ 6 அல்லது 4; புதுச் சட்டியிலிட்டுச் சிவக்க வறுத்து $\frac{1}{2}$ படி நீர்விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து உள்ளியை நன்கு கடைந்து கொண்டு அதில் கோப்பித்தூள் 2 தேக்கரண்டி போட்டூற விட்டுச் சீலையில் வடித்து பனங்கட்டி கடித்துக் கொண்டு குடிக்கவும். இவ்விதம் நாள் 2 முறை கொடுக்கவும். நன்றாகத் தீட்டுப்படும்.

**பெற்ற பின் 4-ம் 5-ம் நாட்களில் வயிற்றுலே போக்காட்டுவதற்குக் குடிநீர் :-**, வெந்தயம் கழ 1. நிலபாகலிலை கழ 6 ($1\frac{1}{2}$

பிடி) 1 படி நீர்விட்டு $\frac{1}{8}$ ஆக வற்றவைத்துப் பனங்கட்டி கூட்டிக் கொடுக்கவும்.

பெற்றபின் கொதி வந்தால் :- மல்லி, தாளிசபத்திரி, சிறு தேக்கு, சித்தரத்தை, வால்மிளகு வகை கழ 2. மதுரம், கறுவா, வெந்தயம், உள்ளி, இஞ்சி, ஆடாதோடை வேர் வகை கழ. 1. $1\frac{1}{2}$ படி நீர் விட்டு $\frac{1}{4}$ ஆக வற்ற வைத்து நேரம் $1\frac{1}{2}$ அவு. வீதம் நாள் 4 முறை கொடுக்கவும், தேவையாயின் கெற்பணி வெட்டு மாறன் புன்னைவேர்க் குளிகை, கஸ்தூரி மிருத்தியாதி, மகாஏலாதிக் குளிகைகளிலொன்றைச் சேர்த்துக் கொடுக்கவும்.

பெற்ற பின் தீட்டுப்படாது கொதிவந்தால் :- (1) சித்தரத்தை, மிளகு, இஞ்சி, அக்கரா, கடுகுரோகணி, உள்ளி, மஞ்சள் வகை கழ. 1. கருஞ்சீரகம், சதகுப்பை வகை. கழ 6. 2 படி நீர் விட்டு $\frac{1}{2}$ ஆக வற்றவைத்து நேரம் 1—$1\frac{1}{2}$ அவு. வீதம் நாள் 4 முறை கொடுக்கவும், தேவையாயின் மகாஏலாதி, கஸ்தூரி மிருத்தியாதி, புன்னை வேர்க்குளிகைகளிலொன்றைக் கொடுத்துவரவும். ஒரு நாளைக்கொரு முறை சவ்வாதுக் குளிகை, இஞ்சி, முலைப்பால் 2 சொட்டுத் தேன் கூட்டிக் கொடுக்கவும்.

பெற்ற பின் தீட்டுப்படாது கொதிவந்தால் :- (2) சித்தரத்தை, மிளகு, இஞ்சி, கண்டதிற்பலி, அக்கரா, தூதுவளைவேர், கண்டங்கத்தரிவேர், ஆடாதோடைவேர், ஏலம், உள்ளி வகை கழ. 2. சதகுப்பை கழ. 4. 2 படி நீர் விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து நேரம் 2 அவு. வீதம் நாள் நாலுமுறை குடிக்கவும்.

காயாசுவாதக் குடிநீர் : (1) சித்தரத்தை, மிளகு, இஞ்சி, தூதுவளைவேர், கண்டங்கத்தரிவேர், ஆடாதோடைவேர், அக்கரா வகை கழ. 2. திற்பலி, சதகுப்பை வகை கழ. 4. 2 படி நீர் விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து நேரம் 2 அவு. வீதம் நாள் நாலுமுறை கொடுக்கவும். விறைப்பு குளிர் சுரம் தீட்டுப்படாத குறைகள் தீரும். மகா ஏலாதி, கஸ்தூரி மிருத்தியாதி முதலியவைகளி லொன்றைக் கொடுக்கலாம்.

காயாசுவாதக் குடிநீர் :- (2) திற்பலி, அதிவிடையம், கறுவா, ஏலம், ஓமம், முத்தற்காசு, அக்கரா, நிலப்பனை, மாயாக்காய், மலைதாங்கிவேர், சிறுகாஞ்சோன்றி, அத்திப்பட்டை, நாவற்பட்டை, கருவேலம்பட்டை, அதிமதுரம் வகை கழ. 1. தனித்



தனி வறுத்து 2 படி நீர் விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றச்செய்து நேரம் $1\frac{1}{2}$ அவு. பத்துச் சொட்டுத் தேன் கூட்டிக் கொடுக்கவும். தலையிடி, சுரம், இருமல், தேகநோ, கழிச்சல் பொருமல், மயக்கம், நெஞ்சடைப்புத் தீரும், தேவையாயின் கஸ்தூரி மிருத்தியாதி மிருக சஞ்சீவினி அபய சஞ்சீவினி, பிராண சஞ்சீவினி. சுராராசசேகர வடிவு முதலியவைகளி லொன்றைக் கொடுக்கவும்.

**காயாசுவாதக் குடிநீர் :- (3)**

காயா சுவாதம் கழிச்சல்சுரம் காணு தோடத் துளிநூறல்
பேயாம் புடலும் மாந்துளிரும், பெருகு மரசு அத்தியித்தி
ஓயா நாவல் முத்தக்கா சோவ்வோர் நாலுகழஞ் சேடுத்துத்
தாயா கியபற் படகமுடன் தாரம் நிலவேம்பு பலமோன்றே.

ஒன்று யெடுத்து நற்சீந்தி லுறவா மிரண்டு பலமாக
அண்டா வதனிற்போட் டேட்டோன் ருனல் தேனு மதில் விட்டு
கோண்டாற் காச்சல் குளிர்தவனம் கோடியவுழலை சுவாதமேலாம்
கண்டா லோடும் பண்டிதரே கைமுறை யாகச் செய்வீரே.

காயாசுவாத மூச்சுக் குடிநீர் :- சித்தரத்தை, மிளகு, திற்பலி, சுக்கு, மதுரம், நற்சீரகம், ஏலம், சிறுநாகம்பூ, வட்டுவேர், நன்னாரிவேர், தூதுவளைவேர், கண்டங்கத்தரிவேர், ஆடாதோடை வேர் வகை கழ. 2. தனித்தனி வறுத்து 2 படி நீர் விட்டு $\frac{1}{4}$ ஆக வற்ற வைத்து நேரம் 1—$1\frac{1}{2}$ அவு. கொடுக்கவும். சுரம், இருமல், கோழை, இளைப்பு, தாகம் தீரும். தேவையாயின் அகஸ்தியர் பெரிய கோரோசினை மாத்திரை, மிருதசஞ்சீவினி, புன்னைவேர்க் குளிகை, கஸ்தூரி மிருத்தியாதி மகாஏலாதி முதலியவைகளிலொன்றையோ அல்லது இரண்டினத்தைச் சேர்த்தோ கொடுக்கவும்.

. காயாசுவாதக் குடிநீர் :- கீழ்காய்நெல்லி, ஆடாதோடை வேர், கடுக்காய், சீந்தில், செவ்வியம், கண்டங்கத்தரிவேர், தூதுவளைவேர், திரிகடுகு, சிறுதேக்கு வகை கழ. 2. 2 படி நீர் விட்டு $\frac{1}{8}$ ஆக வற்றவைத்து நேரம் 1—$1\frac{1}{2}$ அவு. வீதம் நாள் 4 முறை கொடுக்கவும் தேவை கண்டு இரத்தினபூபதி, மகாஏலாதி, கஸ்தூரி மிருத்தியாதி முதலிய குளிகைகளிலொன்றை இஞ்சி முலைப்பாலிலும், மிருத சஞ்சீவினி கோரோசினை மாத்திரை சிவப்பினக் குளிகைகள் மகாகோரோசினை மாத்திரை முதலியவைகளில் ஒன்

றையோ சமயோசிதமாய் இரண்டினத்தையோ ஒன்று சேர்த்துக் குடிநீரிலும் கொடுக்கவேண்டியது.

விஷசுரக் குடிநீர் (பெரியது):— சித்தரத்தை, மிளகு, இஞ்சி, கண்டதிற்பலி, மல்லி, பற்படாகம், பேய்ப்புடல், சீந்தில், சிற்றமட்டி, பேரமட்டி, கடுகுரோகணி, பீநாறிப்பட்டை, வேப்பம் பட்டை, முட்காவிளாய், வேப்பங்கூர் நொச்சிக்கூர் இலுப்பைப்பூ வகை கழ. 2. நிலவேம்பு கழ. 4 4 படி நீர் விட்டு ஒரு படியாக்கி நேரம் $1—1\frac{1}{2}$ அவு. வீதம் நாள் 4 முறை. பெரிய வெள்ளைக் குன்றிமணிக் குளிகை, சுரசூடாமணி மாத்திரை, சுரகுடாரி, தங்க ஏலாதி முதலியவை சேர்த்துக் கொடுக்கவும்.

குலைப்பனோடு வரும் விஷசுரக் குடிநீர்:— தேவதாரம், முத்தற்காசு, கண்டங்கத்தரி வேர், சுக்கு, குமிழம் வேர், கோட்டம், சிறுதேக்கு, பற்படாகம், திற்பலி, கடுக்கரய் வகை கழ. 2. 2 படி நீர் விட்டு நாலொன்றாக்கித் திற்பலி மேற்பொடி தூவி நாள் 6 முறை நேரம் $1\frac{1}{2}$ —2 அவு. வீதம் குடிக்கவும்.

இதில் பெரிய வெள்ளைக் குன்றிமணிக் குளிகை, சந்திராதி மாத்திரை, சுரசூடாமணி, மிருத்தியாதி வகை, ஏலாதி வகைகள் கொடுத்துவரலாம்.

குலைப்பன் காய்ச்சலுக்கு:— சீதேவியார், பேய்ப்பிசுக்கு வட்டுவேர், கோங்கிலவம்பட்டை, சுக்கு, மல்லி, கோரைமூலம், சீந்தில், ஆடாதோடை, தாளிசபத்திரி, தூதுவளை, சாறணை, கோட்டம், திற்பலி, சிறுதேக்கு, கண்டங்கத்தரி, நிலக்குமிழ், நிலவேம்பு, சிறுகாஞ்சோன்றி, பற்படாகம், பேய்ப்புடல், சந்தனம், இருமட்டி, கடுக்காய், கடுகுரோகணி வகை கழ. 1. 2 படி நீர் நாலொன்றாக்கியதில் முன் மருந்துகளைக் கொடுத்து வரவும். வயிற்றாலே போகாவிட்டால் காலையில் கறணிகவாதக் குளிகை கொடுத்து விரேசிக்கவும்

தினச்சுரம் முறைச்சுரம் 3-ம் 4-ம் முறைச் சுரங்களுக்கு — அதிவிடையம், திரிகடுகு, திரிபலை, வெட்பாலை, சிறுமூலம், தேவதாரம், மதுரம், கோட்டம், மஞ்சள், வசம்பு, பெருங்குரும்பை, மல்லி, பேய்ப்புடல், ஆடாதோடை, இலுப்பைப்பூ, வேப்பம் பட்டை, இருவேலி, இலாமிச்சு, கோரைக்கிழங்கு, சீந்தில், சாத்தாவாரி தாமரைப்பூ, பற்படாகம், நிலவேம்பு, நன்னாரி, சிற்றமட்டி



தினச்சுரம் முறைச்சுரம் 3-ம் 4-ம் முறைச் சுரங்களுக்கு: அதிவிடையம், திரிகடுகு, திரிபலை, வெட்பாலை, சிறுமூலம், தேவதாரம், மதுரம், கோட்டம், மஞ்சள், வசம்பு, பெருங்குரும்பை, மல்லி, பேய்ப்புடல், ஆடாதோடை, இலுப்பைப்பூ, வேப்பம்பட்டை, இருவேலி, இலாமிச்சு, கோரைக்கிழங்கு, சீந்தில், சாத்தாவாரி, தாமரைப்பூ, பற்படாகம், நிலவேம்பு, நன்னாரி, சிற்றமட்டி வகை கழ. 2. $2\frac{1}{2}$ படி நீர் விட்டு நாலொன்றாக்கி நேரம் $1-1\frac{1}{2}$ அவு. நாள் 6 முறை கொடுக்கவும். இதில் சுரசிந்தாமணி, சுரசூடாமணி, சுரகோடரி, கோரோசினை, மிருத்தியாதி பெரிய வெள்ளைக் குன்றுமணிக் குளிகை முதலியன கொடுக்கவும் வயிற்றாலே போகவேண்டியிருந்தால் கறணிகவாத குளிகை, முலைப்பாற் குளிகை, கபவாதகுளிகை, முதலியவற்றில் அளவுப்படி காலையில் மாத்திரங் கொடுக்கவும்.

விஷசுரக் குடிநீர் (சிறியது):— சித்தரத்தை, மிளகு, இஞ்சி, கண்டதிற்பலி, மல்லி, பற்படாகம், பேய்ப்புடல், சீந்தில், சிற்றமட்டி, பேரமட்டி, கடுகுரோகிணி, இலுப்பைப்பூ வகை கழ. 2. நிலவேம்பு கழ. 4. 2 படி நீர் விட்டு $\frac{1}{2}$ படியாக்கியதில், நேரம் 1—2 அவுன்ஸ் கொடுக்கவும்.

சேர்க்கும் மருந்துகள்:— இராச ஏலாதி, தங்க ஏலாதி, சுரகோடரிகள், சுரசூடாமணி, சுரராசசேகரவடிவு, வெள்ளைக்குன்றிமணிக்குளிகை முதலியனவற்றில் ஓரினத்தையோ இரண்டினத்தையோ சேர்த்துக்கொடுக்கவும். இடையில் மகாஏலாதி இஞ்சி, முலைப்பாலிற் கொடுக்கவும்.

தீரும் வியாதி: தினச்சுரம் 2-ம் முறை 3-ம் முறை 4-ம் முறைச் சுரங்கள், குவினைன் மருந்தினாற் றீராது. ஈரல் வீங்கிய விஷசுரங்கள் முதலியன தீரும்.

சன்னிவாதசுரக் குடிநீர்:— சித்தரத்தை, மிளகு, இஞ்சி, கண்டதிற்பலி, மல்லி, பற்படாகம், பேய்ப்புடல், சீந்தில், சிற்றமட்டி, பேரமட்டி, அக்கரா மாயாக்காய், கடுகுரோகணி வகை கழ. 2 2 படி நீர்விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து நேரம் 1—2 அவுன்ஸ். முலைப்பால் சேர்த்து நாள் 6 முறை கொடுக்கவும்.

சேர்க்கும் மருந்துகள்:— இராசஏலாதி, சுரராசசேகரவடிவு, மிருதசஞ்சீவினி, செட்டியார் கோரோசினை மாத்திரை,

சன்னிவாத சுரமிறுத்தியாதி முதலியவைகளில் ஓரினத்தையோ இரண்டினத்தையோ சேர்த்துக் கொடுக்கவும்.

வியாதி பலமாயிருந்தால் இடையில் மகாஏலாதி இஞ்சி, முலைப்பாலிற் கொடுக்கவும்.

அதிசார சன்னிவாத சுரக் குடிநீர் :— சித்தரத்தை, மிளகு, இஞ்சி, கண்டதிற்பலி, மல்லி, பற்படாகம், பேய்ப்புடல், சீந்தில், சிற்றமட்டி, பேரமட்டி, அக்கரா, மாயாக்காய், கோரைக்கிழங்கு வகை கழ. 2. 2 படி நீர் விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து நேரம் $\frac{1}{2} - 1\frac{1}{2}$ அவு. தேன் முலைப்பால் சேர்த்துக் கொடுக்கவும். அதிகம் வயிற்றாலே போனால் கஷாயச் சரக்குகளைச் சாடையாக வறுத்தவிக்கவும்.

மருந்துகள் :- சுராசசேகரவடிவு, கஸ்தூரிமிறுத்தியாதி, தங்கஏலாதி, இராசஏலாதி, பெரியபூரணசந்திராதி, செட்டியார் கோரோசினை மாத்திரை, மிருதசஞ்சீவி முதலியவைகளைச் சேர்த்துக் கொடுக்கவும்.

வியாதி பெலமாயிருந்தால் :- மகாஏலாதி, கண்டாவுடதம், இரத்தினபூபதி, நவரத்தினபூபதி, நவலோகபூபதி, மகா பூபதி, முதலியவைகளில் ஒன்றை இஞ்சி முலைப்பால் தேனிற் கொடுக்கவும்.

சன்னி வாத சுரக் குடிநீர் :— திற்பலி, மிளகு, அக்கரா, சிறுதேக்கு, அதிமதுரம், சுக்கு, தாளிசம், சிறுநாகம்பூ, அதிவிடையம், தூதுவளை, கண்டங்கத்தரி, நன்னாரி, சீந்தில், பேய்ப்புடல், சிற்றமட்டி, பேரமட்டி வகை கழ. 2. 4 படி நீர்விட்டு 1 படியாக்கிக் கொடுக்கவும். சன்னிவாத சுரத்துக்கு முன் கூறிய குடிநீரிற் சொல்லிய குளிகைகள் சேர்த்துக் கொடுக்கவும்.

தீரும்வியாதி :- சுரம், சன்னிவாதசுரம், க்ஷயசுரம், காசம், வாத பித்த சிலேற்பன சுரங்கள் தீரும். தேகங்கண்டு, வில்வவேர், கோரைக்கிழங்கு, வேப்பங்கூர் கூடச் சேர்க்கலாம்.

சுவாத சன்னிக் குடிநீர் :- சித்தரத்தை, மிளகு, இஞ்சி, கண்டதிற்பலி, அக்கரா, தூதுவளைவேர், கண்டங்கத்தரிவேர், ஆடாதோடைவேர் வகை கழ 2. 2 படி நீர்விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து நேரம் $1—1\frac{1}{2}$ அவு. குடிநீர் முலைப்பால் சேர்த்துக் கொடுக்கவும்.

மருந்துகள் : அகஸ்தியர் கோரோசினை மாத்திரை, மிருதசஞ்சீவி, சிவப்பினக்குளிகைகள் சேர்த்துக்கொடுக்கவும்.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

வியாதிபெலமாயிருந்தால், இடையில் மகா ஏலாதியும் பூரண சந்திரோதய சிந்தூரம் $1\frac{1}{2}$ அரிசி எடையும் சேர்த்து இஞ்சி, முலைப்பால், தேன் அல்லது இஞ்சி, உள்ளி, முலைப்பால், தேன் அல்லது சித்தரத்தை, உள்ளி, இஞ்சி, முலைப்பால், தேன், கண்டங்கத்தரிச் சமூலம் இடித்துப் புட்டவியலிற் பிழிந்தநீர் முதலியவைகளிற் சமயோசிதமாகக் கொடுக்கவும். மகாஏலாதி, கண்டாவுடதம், மிருதசஞ்சீவினி, இரத்தினபூபதி முதலிய மருந்துகள் இவ்வருத்தங்களுக்கு அவசியம் தேவையானவை.

சிறுவர் கிரந்திச் சுவாதக் குடிநீர் :- சித்தரத்தை, மிளகு, இஞ்சி, கண்டதிற்பலி, அக்கரா, வட்டுவேர், நாயுருவிவேர், கற்பூரவள்ளியிலை வகை கழ. 2. 2 படி நீர்விட்டு நாலொன்றாக்கி நேரம் $\frac{3}{4}—1\frac{1}{2}$ அவு. முலைப்பால் கூட்டி அகஸ்தியர் கோரோசினை மாத்திரை, பாராசசேகரம் பெரிய கோரோசினைமாத்திரை, மிருதசஞ்சீவினி முதலியவைகளில் நாள் 6 முறை கொடுக்கவும்.

சளி கரையாது இருமல் இல்லாதிருந்தால் சிங்கிலிவேர், இக்கிரி வகை கழ. 2. குடிநீரிற் சேர்த்துக் கொள்ளவும். நெஞ்சுக்குக் கற்பூர எண்ணெய் சூடாக்கித் தடவி வெற்றிலை வாட்டிப் போடவும் அல்லது தவிட்டை மெல்லிதாய் வறுத்துப் பூச்சின் மேல் ஒத்தணம் பிடிக்கவும்.

தொய்வுச் சுவாதக் குடிநீர்:— சித்தரத்தை, மிளகு, திற்பலி' இஞ்சி, கண்டதிற்பலி, கராம்பு, மதுரம், அக்கரா, வட்டுவேர், தூதுவளை, ஆடாதோடை, இயங்கம்வேர் வகை கழ. 2. 2 படி நீர்விட்டு நாலொன்றாக்கியதில் நேரம் $1\frac{1}{2}—2$ அவு. குடிநீரில் முலைப்பாலை விட்டு அகஸ்தியர் கோரோசினைமாத்திரை (ரசகற்பூரம் சேர்ந்தது) பெரிய கோரோசினை மாத்திரை, மிருதசஞ்சீவி, சாதிலிங்கம், மிறுத்தியாதி, சொர்ண கோரோசினை மாத்திரை முதலியவைகளில் ஒன்றை அல்லது இரண்டு இனத்தை ஒன்றுசேர்த்துக் கொடுக்கவும்.

சிறுவர் கிரந்தி அதிசாரம் கிருணிக் குடிநீர் : திற்பலி, ஏலம், ஓமம், வெந்தையம், அக்கரா, மாதாளமோடு, கோரைக்கிழங்கு, அதிவிடையம், மலைதாங்கிவேர், மாசுகொட்டைப்பருப்பு வகை கழ. 2. வறுத்தவித்து நாலொன்றாக வற்றவைத்து நேரம் $\frac{3}{4} - 1$ அவு. குடிநீரிற் தேன், முலைப்பால் கூட்டி நாள் 6 முறை கொடுக்கவும், இதில் தோடம்பழக் கோரோசினைமாத்திரை, கஸ்தூரிமிறுத்

தியாதி சேர்த்துக் கொடுக்கவும். தேற்றுங்கொட்டைக் குளிகை, புன்னைவேர்க்குளிகை, அமிர்தசஞ்சீவி முதலியவைகளும் கொடுக்கலாம்.

**சிறுவர் வலி சுரக் குடிநீர்:—** சித்தரத்தை, மிளகு, இஞ்சி, கண்டதிற்பலி, சிறுதேக்கு, சிற்றமட்டி, வட்டுவேர், நாயுருவிவேர், கடுநரோகணி வகை கழ. 1 – 2. வேப்பங்கூர் பிடி 1 - 2. 2 படி நீர் விட்டு நாலொன்றுக்கி நேரம் $\frac{1}{2}$–1 அவு. கஷாயத்தில் அகஸ்தியர் கோரோசினை மாத்திரை, சிவப்பினக் குளிகைகள் கொடுக்கவும். 3 நாட்களின்பின் இக்குடிநீரில் இராசஏலாதி கொடுக்கலாம்.

**சிறுவர் கரப்பன் குடிநீர்:—** கடுக்காய், கடுகுரோகணி, கருஞ்சீரகம், வட்டுவேர், நாயுருவிவேர், அக்கரா, இயங்கம்வேர், மல்லி, நற்சீரகம் வகை கழ. 2. பிரமி, வல்லாரல், கற்பூரவள்ளி, கிரந்திகள்நாயன், ஈரவெண்காயம் வகை பிடி 1. 3 படி நீர் விட்டு நாலொன்றாக வற்றவைத்து நேரம் 1—$1\frac{1}{2}$ அவு. கஷாயம் கொடுக்கவும். இக் கஷாயத்தில் காலையில் அளவுப்படி கருப்பஞ்சாற்றுக்குளிகை விரேசிக்கக் கொடுக்கலாம். மத்தியானம் மாலைக்குச் செட்டியார் கோரோசிணை மாத்திரை, அகஸ்தியர் கோரோசினை மாத்திரை, இராசஏலாதி, மிருதசஞ்சீவி முதலியவைகளைக் கொடுக்கவும். விரேசன மருந்து 3 நாட்களுக்குமேல் அடுத்துக் கொடுக்கத் தேவையில்லை.

**சிறுவர் மாந்தக் கழிச்சல் சுரக் குடிநீர்:**

சீரிய ரிருவ ரோமம் திரிக டுகுடன் கராம்பு
கூரிய வீர வுள்ளி குணமுள்ள மாயாக் காயும்
பாரினில் மதுர மேலம் பருத்தி மாதுளையின் பிஞ்சும்
நேரிவை சமனுய்க் கூட்டி நீரினி லூற வையே.

( இவற்றோடு வேப்பங்கூர், ஓதியங்கூர், கருவேப்பிலைக்கூர் வகை பிடி $\frac{1}{2}$ சேர்க்கலாம்) (வறுத்தவிக்கவும்)

வைத்த நீர்தனைத் தெளித்து வளரிளங் குழந்தை கட்கு
மெத்தவே களிந்து வாதை மிகுதியாய்ச் சுரமுங் கண்டால்
சுத்தமாய்க் கொடுப்பீ ராகிற் சோதிதன் னருளி னலே
மொய்த்ததோர் பிணிபோ மென்றே முனிவரன் மொழிந்ததாமே.

(தேன் கூட்டிக் கொடுக்கவும்)

இக் கஷாயத்தில் தோடம்பழக் கோரோசினை மாத்திரை, புன்னைவேர்க் குளிகை, செட்டியார் கோரோசினை மாத்திரை, அமிர்தசஞ்சீவி, தேற்றுங்கொட்டைக் குளிகை, சந்திராதி மாத்திரை, சிறு சிவப்புக்குளிகை முதலியவைகளைக் கொடுக்கவும்.



**சிறுவர் இரத்தாதிசாரம், இரத்தக்கிருணி, சுரம் முதலியவற்றுக்குக் குடிநீர்:—** திற்பலி, ஏலம், ஓமம், வெந்தயம், அக்கரா, மாதாளமோடு, கோரைக்கிழங்கு, மலைதாங்கிவேர், அதிவிடையம், வெட்பாலையரிசி, அத்திப்பட்டை, நாவற்பட்டை, மாங்கொட்டைப் பருப்பு வகை கழ. 2. நன்கு வறுத்தவித்துத் தேன்கூட்டித் தோடம்பழக் கோரோசினை மாத்திரை, கஸ்தூரிமிருத்தியாதி, பூரணசந்திராதி, புன்னைவேர்க்குளிகை, அமிர்தசஞ்சீவி முதலியவைகளை நாள் 6 முறை கொடுத்து வரவும்.

**சிறுவர் விஷவாத கரப்பன் குடிநீர்:—** உள்ளி, இருசீரகம், மதுரம், சுக்கு, கடுகுரோகணி, கடுக்காய், தான்றிக்காய், ஏலம், மல்லி, திற்பலிமூலம், செவ்வியம் செவ்வள்ளி வகை கழ. 1. கிரந்திகள்நாயன், வல்லாரல், விட்டுணுகிராந்தி, கற்பூரவள்ளி, தூதுவளையிலை, பிரமி, சிறுகாஞ்சோன்றியிலை, ஈரவெங்காயம் வகை பிடி 1. நாயுருவிவேர், வட்டுவேர், இயங்கம்வேர், செங்கத்தாரிவேர், ஆடாதோடைவேர் வகை கழ. 4. 6 படி நீர்விட்டு நாலொன்றுக்கி ஒரு நாளைக்கு ஆறுமுறை நேரம் 1 - 2 அவு. கஷாயம் கொடுக்கவும் காலையில் கருப்பஞ்சாற்றுக் குளிகை அளவுப்படி கொடுக்கவும். மத்தியானம் பின்னேரம் இராசஏலாதி கோரோசினைமாத்திரை மிருதசஞ்சீவி, சந்திராதிமாத்திரை முதலியவைகளைக் கொடுத்து வரவும்.

**சிறுவர் சிரங்கு கரப்பன் உள்ளடங்கி வீங்கு சுரக் குடிநீர்:—** கடுக்காய், கடுகுரோகணி, கருஞ்சீரகம், மல்லி, நற்சீரகம், பெருஞ்சீரகம், வால்மிளகு, நாயுருவிவேர், வட்டுவேர் வகை கழ. 2. பிரமி, வல்லாரல், சுரையிலை, நீர்முள்ளி, வெளவலொட்டி, பீச்சுவிளாத்தி, எருமைமுல்லை, பஞ்சபாண்டவர்முல்லை, கிரந்திகள்நாயன், சிறுநெரிஞ்சி, பீமைசாறி வகை பிடி 1. 6 படி நீர்விட்டு நாலொன்றுக்கிக் காலையில் கருப்பஞ்சாற்றுக்குளிகை, மத்தியானம் இரவுக்கு இராசேலாதி, சுராசசேகரவடிவு, மிருதசஞ்சீவி, செட்டியார் கோரோசினைமாத்திரை முதலியவற்றைக் கொடுக்கவும்.

**வீங்கு சுரக் குடிநீர்:—** கடுக்காய், கடுகுரோகணி, கருஞ்சீரகம், மல்லி, பெருஞ்சீரகம், வால்மிளகு, நாயுருவிவேர், வட்டுவேர் வகை கழ. 2. பிரமி, வல்லாரல், பீச்சுவிளாத்தி, வெளவலொட்டி, நீர்முள்ளி, கிரந்திகள்நாயன், எருமைமுல்லை, நீர்நொச்சி,

118682

பஞ்சபாண்டவர்முல்லை, சுரைப்பழுத்தல், சிறுநெரிஞ்சிவேர், கற்றுளஞ் சருகு வகை பிடி 1. 8 படி நீர்விட்டு நாலொன்றுக்கிக் காலையில் கருப்பஞ்சாற்றுக் குளிகை, மத்தியானம், மாலையில் தங்கவலாதி, இராசவலாதி, மிருதசஞ்சீவி, அகஸ்தியர் கோரோசினை மாத்திரைகளில் ஒன்றை அல்லது இரண்டினத்தைச் சேர்த்தும் கொடுக்கவும்.

**சிறுபிள்ளை கொள்ளிக் கரப்பன் :—** பருத்தியிலை, புளியங்குருத்து, வெளவலொட்டியிலை, ஈரவெங்காயம் வகை பிடி 2. துவைத்துப் பிழிந்து ஒரு சிறங்கை சாறு குடிக்கக் கொடுத்துச் சக்கையைத் தடிப்பின்மேற் பூசுக. மற்றநாள் பருத்தியிலை அவித்த தண்ணீரிற் குளிக்கச்செய்யவும். அடுத்தநாள் கருப்பஞ்சாற்றுக் குளிகை கொடுத்து விரேசிக்கவும். அனுபானம் பிரமி, வல்லாரல், நீர்முள்ளி, வெளவலொட்டி, கிரந்திகள்நாயன், கற்றுளஞ்சருகு, ஈரவெண்காயம் வகை கழ. 4· கஷாயஞ்செய்து விரேசிக்கவும்.

**சிறுவர் சின்னமுத்து, பறவை, பொக்குளிப்பான்,**
**அம்மைச்சுரக் குடிநீர்:-**

கோட்டை தள்ளிய கடுக்காய் கூறுநா யுருவி வேர்த்தோல்
இட்டமாங் கரிய சீரம் இடைசம னுயெ டுத்தே
தட்டிலா நீர்விட் டேதான் தகவோடு காய்ச்சி யூட்டு
கெட்டிடு சுரம்போ மட்டும் கிளர்பனங் கட்டி கூட்டி.

போசித்திடப் பேதி யுண்டாம் போசனந் தெளிவு தாலக்
கசப்பிலாக் கட்டி கல்லாக் காரங்கற் கண்ட தாகும்
இசைத்திடு சுரந்தா னிற்கு மளவுமிங் கிவையே யல்லால்
வசப்படு மற்றேன் றுகா வருஞ்சுரம் போய பின்னர்,

குணமறிந் தேமோ ரன்னங் குளிர்புனற் பாகங் கஞ்சி
மணமுள வடைகா யோடு வண்பனங் கட்டி தீதிற்
கணமுறு கல்லாக் காரங் கற்கண்டு சேர்த்திவ் வண்ணம்
உணவிடு வசூரி யோடே யல்லல் செய்பொக் குளிப்பான்

பறவைக்கு மிவைபோல் மற்றும் பகர்தரு நோய்கட் கெல்லாம்
குறைவுறு வகையே செய்வாய் கூறுமிந் நோய்கட் குள்ளே
அறைபெரு வசூரி யென்ப தருவிர ணங்கள் காட்டும்
நிறையும் பக்குவ மதாக நீங்கினைந் ததனைப் பாரே.





புனற்பாகம் - சமைத்த சாதத்தைத் திரும்பவும் வெந்நீர் விட்டுச் சமைத்தசோறு.

**சின்னமுத்து பொக்குளிப்பான் வைசூரியில் வருங்**
**கடின சுரங்களுக்குக் குடிநீர்:—**

ஆமென்ன சூரியது சுரமே கண்டால்
அழகான எலுமிச்சை வேரின் பட்டை
சேமென்ற வேலமுடன் சீந்தி லாமிச்சு
திறமான பற்படாகம் சந்தணமும் முத்தம்
பானென்ற வகையேழும் வராகன் வீதம்
பண்பாகக் கியாளஞ்செய் மூன்று நேரம்
வாமென்று குடித்திடவே சுரமுந் தீரும்
வளமாக விம்மருந்தை யறிந்து செய்யே.
(அகஸ்தியர் வைசூரி நூல் 80-ஐப் பார்க்கவும்)

செய்யடா வசூரியதிற் சுரமே கண்டால்
திறமாகச் சொல்லுகிறேன் காமப் பூதான்
பையவே விராகனு மோவைங் தெடுத்து
பாங்காகக் கியாளந்தான் செய்து கொண்டு
மெய்யடா வாவின் ரோசினை காலாய்
விளங்கவே யதிற்கரைத்து வுள்ளே கொள்ளு
நையல்செய் சுரங்களெல்லாந் தீரும் பாரு
நலமாகக் கிரந்தியது வெளியிற் காணும்.

**சின்னமுத்து, பொக்குளிப்பான், வைசூரி வந்து முழுகியபின் நெஞ்சிற் சளியும், வயிற்றவியலும், சுரமும் வருவதற்குக் குடிநீர்:-** சிறுதேக்கு, திற்பலிமூலம், திற்பலி, அதிமதுரம், கோட்டம், வலம்புரி, இருசிரகம், செவ்விளனி, அக்கரா, செண்பகப்பூ, இருவேலி, மிளகு, ஈரவெண்காயம், செஞ்சந்தனம், இலாமிச்சு, சிற்றமட்டி, பேரமட்டி, நன்னாரி, வட்டு, தூதுவளை, கண்டங்கத்தரி, முத்தற்காசு, பருத்திப்பிஞ்சு, பற்படாகம் வகை கழ 2. 6 படிநீர்விட்டு நாலொன்றுக்கி நேரம் 1-2 அவு கஷாயம் கொடுக்கவும். இதில் செட்டியார் கோரோசினை மாத்திரை, மிருத சஞ்சீவினி கலந்து கொடுக்கவும்.

**சிறுவர்களுக்கு முன்போல் வருந் நோய்களுக்குப், சின்னமுத்தின் பின்வரும் சுவாதசன்னிக்குங் குடிநீர்:-** மிளகு, வட்டுவேர், நாயுருவிவேர், மல்லி, அக்கரா, கற்பூரவள்ளி, கண்டதிற்பலி, ஈரவெண்காயம்; பற்படாகம் வகை கழ. 2. 2 படி நீர்விட்டு நாலொன்றாக்கியதில் நேரம் 1–1½ அவு. கஷாயம் முலைப்பால் கூட்டிக் கொடுக்கவும். இதில் செட்டியார் கோரோசினை மாத்திரை, மிருதசஞ்சீவி, கற்பூரம், அகஸ்தியர் கோரோசினை மாத்திரை, முதலியவற்றைக் கலந்து கொடுக்கவும்.

**சன்னிவாத சுரப் பெரிய குடிநீர்:** (பரராசசேகரம்)

முத்தற்காசு, நன்னாரி, பேய்ப்புடல், கொன்றைப்பட்டை, கொன்றைப்பழம், வில்வவேர், சிறுகாஞ்சோன்றி, பங்கம்பாலை, இருமட்டி, பற்படாகம், நீர்வள்ளி, கொட்டி, வேப்பலகு, லாமிச்சு, குதிரைவாலி, சீதேவியார், ஆடாதோடை, கண்டங்கத்தரி, தாமரைவளையம், சீந்தில், நிலவேம்பு, கீழ்காய்நெல்லி, இலுப்பைப்பூ, சீதுளாய், நிலக்குமிள், மரல், பயளி, நெல்லி, வெட்பாலையரிசி, மல்லி, கோட்டம், அதிவிடையம், இருவேலி, சுக்கு, அதிமதுரம்' மிளகு, திற்பலி, கடுக்காய், நெல்லி, தான்றி, சிறுமூலம், கடுகுரோகணி, பசுமஞ்சள், வசம்பு, தேவதாரம், முந்திரிகை, பேரீந்து, சந்தனம் வகை கழ. 2. 8 படி நீர்விட்டு நாலொன்றாக்கித் திற்பலி, இந்துப்பு மேற் பொடி தூவி, நேரம் 1—1½ அவு. நாள் 6 முறை குடிக்கவும். இதில் சுரராசசேகரவடிவு கற்பூரஞ்சேர்ந்த அகஸ்தியர் கோரோசினை மாத்திரை, இராசஏலாதி, செட்டியார் கோரோசினை மாத்திரை, தங்கஏலாதி, அமிர்தஏலாதி, மிருதசஞ்சீவினி, மகாஏலாதி முதலியவைகளைத் தனித்தும் இரண்டினத்தைக் கலந்தும் கொடுக்கவும்.

**சன்னிவாத சுரக் குடிநீர்:-** சுக்கு, நெல்லி, தான்றி, கோட்டம், வெட்பாலை, இருவேலி, மல்லி, தேவதாரம், கடுகுரோகணி, சந்தனம், முந்திரி, பேரீந்து, இலுப்பைப்பூ, முத்தற்காசு, தாமரைவளையம், பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, நெய்தல், பற்படகம், லாமிச்சு, பங்கம்பாலை, சிறுகாஞ்சோன்றி வகை கழ. 2. 2 படி நீர்விட்டு நாலொன்றாக்கி, நேரம் 1½ – 2 அவு. வீதம் நாள் 6 முறை கொடுக்கவும். முன்குடிநீரிற் சொல்லிய மருந்துகளையும் இக் கஷாயத்திற் கொடுத்துவரவும்.



**சன்னிவாத சுரத்திலே இரத்தமுடைத்தால்:-** திற்பலி, ஏலம், ஓமம், அக்கரா, கோரைக்கிழங்கு, மாயாக்காய், வால்மிளகு, மாதாளமோடு, மலைதாங்கிவேர், அதிவிடையம், அத்திப்பட்டை, நாவற்பட்டை, கருவேலம்பட்டை வகை கழ. 2. வறுத்தவிக்கவும். 2 படி நீர்விட்டு நாலொன்றாக வற்றவைக்கவும். கஸ்தூரிமிருத்தியாதி, பூரணசந்திராதி, தேற்றாங்கொட்டைக்குளிகை, சுரராசசேகரவடிவு முதலியவைகளில் ஒன்றையோ இரண்டினத்தையோ ஒருங்குசேர்த்து மேற்படி குடிநீரில் முலைப்பால் தேன் கூட்டி நாலு மணித்தியாலத்துக்கொருமுறை கொடுக்கவும். இடையில் மும்மாத்திரை அல்லது மகாஏலாதி முலைப்பால் தேனிற் கொடுக்கவும்.

**சன்னிவாத சுரத்தின் பின் நிற்கும் விஷசுரத்துக்கு:-** கண்டங்கத்தரிவேர், மல்லி, சீந்தில், அக்கரா, அல்லிக்கிழங்கு, முத்தற்காசு, செஞ்சந்தனம், நிலவேம்பு, பேய்ப்புடல், ஆடாதோடைவேர், தாமரைவளையம், கடுகுரோகணி, வெட்பாலையரிசி, வேப்பம்பட்டை, சிறுதேக்கு, பற்படாகம், இலுப்பைப்பூ வகை கழ. 1½. 2 படி நீர்விட்டு நாலொன்றாக்கி நேரம் 1 – 1½ அவு. குடிநீரில் தங்கஏலாதி, இராசஏலாதி, சன்னிவாதசுரமிருத்தியாதி, சுரசூடாமணி முதலியவைகளில் இரண்டினத்தைச் சேர்த்து முலைப்பால் கூட்டிக் கொடுக்கவும்.

**நாட்பட நிற்குஞ் சன்னிச் சுரம் விஷசுரங்களுக்குச் சஞ்சீவிக் குடிநீர்:-** திரிகடுகு, திரிபலை, முந்திரிகை, இருசீரகம், கராம்பு, ஏலம், மாயாக்காய், வால்மிளகு, சித்தரத்தை, தேவதாரம், கோட்டம், இருவேலி, கடுகுரோகணி, மதுரம், சந்தணம், வெட்பாலையரிசி, சிறுதேக்கு, மல்லி, இலுப்பைப்பூ, பற்படாகம், கோரைக்கிழங்கு, ஆடாதோடைவேர், வில்வவேர், இலாமிச்சம்வேர், கண்டங்கத்தரிவேர், மலைதாங்கிவேர், சிறுகாஞ்சோன்றி, நன்னாரி, பேய்ப்பீர்க்குவேர், நிலக்குமிழ்வேர், சிற்றமட்டி, தூதுவளை, கீழ்காய்நெல்லி வட்டு, நாயுருவி, தாமரைவளையம், நெய்தற்கிழங்கு, சாயவேர், இயங்கு, சீந்தில் வகை கழ. 2. 8 படி நீர்விட்டு நாலொன்றாக்கி இளஞ்சூடு ஆறாது வைத்துக்கொண்டு நேரம் 1½ – 2 அவு. வீதம் நாள் 6 – 8 முறை கொடுக்கவும்.

1186..

இராசஏலாதி, கொம்பேலாதி, தங்கேலாதி, சுராரசசேகர வடிவு, மிருத்தியாதிவகை, ஆனைக்கொம்பு சேர்ந்த சந்திராதி பூரண சந்திராதி முதலியவைகளைக் கொடுத்துவருக.

சுரம் 64, சன்னி 18, சுவாதம் 11, வலி 7, குன்மம் 8, தோஷம் 18 தீரும் (தோஷத்தை ஏழாகவும் சுருக்கிக்கூறுவதுண்டு.)

நாட்பட்ட சுரங்களுக்குப் பொட்டளிக் கஷாயம்:—

திரிகடுகு, ஏலம், இலவங்கம், செண்பகப்பூ, கோட்டம், மதுரம், செவ்வியம் சிறுமூலம், வெட்பாலையரிசி, பச்சிலை, விளாலரிசி, கடுகுரோகணி, மல்லி, இருசீரகம், கடுக்காய், கராம்பு, சிறுதேக்கு வகை கழ. 1. இருமட்டிவேர், பற்படாகம், சிறுகாஞ்சோன்றிவேர், நிலவேம்பு, சீதேவி, நாயுருவிவேர், மூக்கறைச்சிவேர், மலைதாங்கிவேர், வட்டுவேர், கற்றாளஞ்சருகு, கோரைமூலம், சீந்தில், பேய்ப்புடல் வகை கழ. 1. கடைச்சரக்குகளை இடித்துப் பொட்டளிகட்டி வேர்வகைகளைத் தறித்திடித்து 4 படி நீர்விட்டுப் பொட்டளியையும் கூடப்போட்டு நாலொன்றாக வற்றவைத்து இக்கஷாயத்தில் பொட்டளி மருந்திற் கொஞ்சம் எடுத்தரைத்துக் கலக்கிக் குடிக்கவும் அல்லது இக்கஷாயத்தில் சுராரசசேகரவடிவு, சுரசூடாமணி, இராசஏலாதி, அகஸ்தியர் கோரோசனை மாத்திரை, அமிர்தசஞ்சீவிக் கோரோசனை மாத்திரை முதலியவைகளில் ஒன்றைக் கூட்டி முலைப்பால் சேர்த்துக் குடிக்க சுரம் 64 உம் தீரும்.

பெரிய குடிநீர்:

சீந்தில் வேப்பலகு சிறுகாஞ் சோன்றியும்
சாந்து சந்தனஞ் சாறணை நெரிஞ்சியும்
பெருங் குரும்பையும் பேய்ப்புட லிலையும்
பெருகு முந்திரிகை பேரீச்சம் பழமும்
வட்டத் துத்தியும் வரிக்கற் றாளையும்
விட்டுணு காந்தியும் வேரிலா மிச்சும்
ஆரு நன்னாரியு மாடா தோடையும்
வேருடன் வில்வமும் வேற்றேலி கொன்றையும்
முத்தற் காசுடன் முதிய தூதுளை
சித்த மல்லியும் சேவகன் பூடும்
நிலவேம்பு முள்ளிவேர் நீண்ட முல்லைவேர்



குலவிய வேலமும் கோள்கரு வேம்பு
மிருப்பைப் பூவு மிருவேலி கோட்டமும்
கடுக்காய் மிளகு மவுரி பற்படகம்
மிடுக்கா மதுரம் வெட்பா லரிசி
நெல்லி தான்றி நேரிய திற்பலி
சொல்லிய சுக்குச் சுகம்பெறு தேக்கு
தேவ தாரஞ் சீரிய வோமம்
தாவிய வரத்தை சதகுப்பை கருஞ்சீர்
கொத்த மல்லியுங் கூரிய கடுகு
மித்தனை யெல்லா மியல்பெறச் சமனாய்க்
கூட்டி யிடித்துக் கொண்டோரு பானையில்
வாட்டிய நீரும் வாருநா நாளி
இசையக் காய்ச்சி யெட்டொன் றாக்கி
பசையற வேந்த பநத்தி லிறக்கி
மெல்ல வடித்து மேற்போடி திற்பலி
தெள்ளித் தூவித் தேனுடன் குடித்திடில்
எண்ணிய சுரங்க ளெட்டெட் டானதும்
நண்ணிய சன்னி நான்மூன் றொன்றும்
மானிடர் தம்மை வருத்துவ தில்லையேன்
றானதோ ராயு ளருமறை தன்னிற்
தேர்ந்துரை செய்தார் சிவனுமை தன்க்கு
ஆய்ந்ததை முருகன் அகத்தியர் தமக்கு
உரைத்திடக் குறுமுனி யுலகத் தேவரும்
வருந்திடா திருக்க வகுத்த வவுஷதமே.

* சேவுகன்பூடு – சிவனார் வேம்பு

இக்கஷாயத்தில் முன் கூறப்பட்ட மருந்துகளைச் சேர்த்துக் கொடுக்கவும்.

கொள்ளைச் சுரக் குடிநீர்:— வெட்பாலை, அதிவிடையம், திரிகடுகு, இருசீரகம், ஓமம், மல்லி, சந்தணம் தேவதாரம், திரிபலை, சீனப்பாகு, கொட்டிக்கிழங்கு, தாமரைவளையம், சீந்தில், கோரைக்கிழங்கு, பற்படாகம், நன்னாரி, இலாமிச்சு, அதிமதுரம், வில்வவேர், இந்துப்பு, மலைதாங்கிவேர் வகை கழ. 2. 4 படி நீர்விட்டு நாலொன்றாக்கி நேரம் $1\frac{1}{2}$ - $2\frac{1}{2}$ அவு. வீதம் நாள் 6 முறை குடிக்கவும்.

இதில் சின்னச்சிவப்பு, புன்னைவேர்க்குளிகை, சுரசிந்தாமணி, சுர சூடாமணி முதலிய மாத்திரைகளும் கொடுத்துவரவும்.

**கொள்ளைச் சுரக் குடிநீர்:-** நொச்சிவேர், தூதுவளைவேர், சிற்றமட்டி, ஆடாதோடை, இருசீரகம், மல்லி, சுக்கு, வெண்காயம், மிளகு, திற்பலி, மதுரம், ஓமம், வெந்தயம் வகை கழ. 1. $1\frac{1}{2}$ படி நீர்விட்டு நாலொன்ருக்கிக் கொடுக்கவும். ஏனைய பிரயோகங்கள் முன் குடிநீர்போல்.

**விடாச் சுரக் குடிநீர்:-** மல்லி, இருசீர், திற்பலி, சுக்கு, கோட்டம், கடுகுரோகணி, கடுக்காய், சிறுகாஞ்சோன்றிவேர், சிறு தேக்கு, சிற்றரத்தை, சந்தணம், பற்படாகம், கோரைக்கிழங்கு, ஆடாதோடை, நன்னரி, பேய்ப்புடல், சீந்தில், நிலவேம்பு, இலாமிச்சு, இருவேலி, இருமட்டி, வில்வவேர் வகை கழ. 1. 2 படி நீர் விட்டு நாலொன்ருக்கி நேரம் $1-1\frac{1}{2}$ அவு. முலைப்பால் தேன் கூட்டிக் கொடுக்கவும். இதில் ஏலாதிவகைகள் மிருத்தியாதிவகைகள் சேர்த்துக் கொடுக்கவும்.

**சுரம், நாவரட்சி, வேர்வை, விக்கல், கழிச்சல், தோசம் தீரக் குடிநீர்:-** திரிகடுகு, தான்றி, கடுக்காய், செண்பகப்பூ, இலவங்கம், கோட்டம், மதுரம், செவ்வியம், வெட்பாலை, பச்சிலை, சிறுமூலம், விளாலரிசி, ஓமம், கடுகுரோகணி, இருசீர், கச்சோலம், சிறு தேக்கு, தேவதாரம், சித்தரத்தை, கராம்பு, இருவேலி, சிறுகாஞ்சோன்றி, மலைதாங்கி, வட்டு, ஆடாதோடை, தூதுவளை, பற்படாகம், சீந்தில், நிலவேம்பு, பேய்ப்புடல், இலாமிச்சு, நன்னரி, கோரைமூலம், மூக்கறைச்சிவேர் வகை கழ. 1. நாலுபடி நீர்விட்டு நாலொன்ருக்கி நேரம் $1\frac{1}{2}-2$ அவு. வீதம் நாள் 5 முறை கொடுக்கவும். மேற்சொன்ன வியாதிகள் தீரும். மிருத்தியாதி, இராசசேகர வடிவு, தங்கஏலாதி, சந்திராதி முதலியவைகளைக் கொடுக்கவும்.

**தொய்வு, இருமல், சுரக் குடிநீர்:-** திற்பலி, கருஞ்சீரகம், அதிமதுரம், நாகம்பூ, வால்மிளகு, மல்லி, பெருஞ்சீரகம் வகை கழ. 1. கடுக்காய், இஞ்சி, வகை கழ. 4. தூதுவளை, குன்றுமணி, நிலபாவல், வல்லாரல், பிரமி, கற்பூரவள்ளி இவை சமூலம் இயங்கந் துளிர், வகை பிடி 1. 2 படி நீர் விட்டு நாலொன்ருக்கியதில் அகஸ்தியர் கோரோசினைமாத்திரை, சொர்ண கோரோசினை மாத்திரை, மிருதசஞ்சீவினி முதலியவைகளைக் கொடுக்கவும்.



**வாயவியற் குடிநீர்:-** அத்தி, புல்லாந்தி, நாவல், ஓதி, ஆவரசு, கறியகத்தி இவைகளின் பட்டை, ஆலம்முகை, தென்னம்பாளை, வல்லாரல், ஈரவெங்காயம் வகை பிடி 1. நற்சீரகம், வெளுத்தல், சீனக்காரம், வெண்காரம், மாயாக்காய், அக்கரா, கோட்டம், செவ்வள்ளி, வலம்புரிக்காய், கைப்பு, களிப்பாக்கு, ஓமம் வகை கழ. 2. 8 படி நீர்விட்டு 4 படியாக வற்றவைத்து நாள் மூன்றுமுறை மூன்றுநாள் கொப்பளிக்கவும். $1\frac{1}{2}-2$ அவு. குடித்துவரவும். இதில் சந்திராதிமாத்திரை, மிருத்தியாதிவகைகள், இராசஏலாதி, தங்க ஏலாதியும் சேர்த்துக் கொடுத்துவரலாம்.

**வாயவியற் குடிநீர்:**

“வாய்க்கிரந்திக் கொருகுடிநீர் வகுத்தார் பூலா
வளர்மருதந் தோலகத்திப் பட்டை நாவல்
காய்க்குமிள் வேரியங்கு தூதுளையின் வேரும்
கதித்தபோன் ஞவரம்பட்டை கடுக்காய் பத்து
நீக்கமற விடித்தேட் டொன்ருகக் காய்ச்சி
நிச்சயமாய்க் கொப்பளிக்கக் கண்ட ரோகம்
சீக்குரிதி வாயினிடைச் சிங்க ரோகம்
சிதறியோழிந் திடுமீயான் செல்வம் போல”

**சுரத்தில் வரும் சலக்கடுப்பு எரிவுக்குக் குடிநீர் :-**

தேற்ருவிதை, வால்மிளகு, நற்சீரகம் வகை கழ. 2. சிறுநெரிஞ்சில்வேர் பிடி 1. 1 படி நீர்விட்டு $\frac{1}{4}$ படியாக வற்றவைத்து நேரம் 2 அவு. வீதம் நாள் 4 முறை கொடுக்கவும். தேவையானல் இராசஏலாதி, தங்கஏலாதி சேர்த்துக் கொடுக்கவும்.

**சுகபேதிக் குடிநீர்:** கடுக்காய்த்தோல், பிரமி, சூரத்தாவரையிலை, நிலபாவலிலை, ரோசாப்பூ, கற்ருளஞ்சருகு, ஈரவெங்காயம், கடுகுரோகணி வகை பிடி 1. அல்லது கழ. 4. 1 படி நீர்விட்டு $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து நேரம் 4 அவு. வீதம் பனங்கட்டி கூட்டிக் குடிக்கவும்.

**வாதசுரக் குடிநீர்:** சித்தரத்தை, மல்லி, சிறுதேக்கு, இஞ்சி, கண்டதிற்பலி, பற்படாகம், பேய்ப்புடல், சீந்தில், சிற்றமட்டி, பேரமட்டி, கடுகுரோகணி, அக்கரா வகை கழ. 2. அமுக்கிராய், இயங்கு, நன்னரி, பறங்கிக்கிழங்கு, வெள்ளறுகு வகை கழ. 4.

தேவைகண்டு நாலு கழஞ்சாகச் சொல்லப்பட்ட சரக்குகளை நிறையிற் கூட்டியும் குறைத்தும் சேர்த்துக்கொள்ளலாம். 12 கழஞ்சு சரக்கிற்கு ஒருபடிவீதம் தண்ணீர் வைத்து நாலொன்றாகக் கொள்ளவும். இதில் நேரம் 1 – 2 அவு. நாள் 4 முறை குடிக்கவும். அகஸ்தியர் கோரோசினைமாத்திரை, மிருதசஞ்சீவி கூட்டிக் கொடுக்கவும்.

இக் கஷாயத்தில் தேவையாயின் காலைவேளைகளில் கறணிக மாத்திரை இரு குளிகைகள் கொடுத்துக்கொள்ளலாம்.

**தீரும் வியாதி:** பிடிப்புகளுடன் வந்த வாயுச்சுரம், வாத சுரங்கள் தீரும்.

**வாதக் குடிநீர்:** நன்னாரி, நிலப்பனை, சிற்றமட்டி, சீந்தில், பேரமட்டி, சிவனார்வேம்பு, ஆடாதோடை, பெருமருந்து, கான்றை, காற்றோட்டி, உவாய் வகை கழ. 4. அமுக்கிராய் இயங்கு, பிரப்பங்கிழங்கு, வெள்ளறுகு, பறங்கிக்கிழங்கு வகை கழ. 8. திரிகடுகு, ஏலம், வால்மிளகு, வாய்விளங்கம், இலவங்கம், சிறுதேக்கு, கற்கடகசிங்கி, கண்டதிற்பலி, கடுகுரோகணி, அதிமதுரம், அக்கரா வகை கழ. 2. 8 படி நீர்விட்டு 1 படியாக்கி நாள் 6 முறை நேரம் $1\frac{1}{2}$ – $2\frac{1}{2}$ அவு. குடிநீர் குடிக்கவேண்டியது. வாதசுரம், வாதப் பிடிப்பு, நீட்டமுடக்கவியலாவேதனை, மொழிவீக்கம், தசைநார் வீக்கம் யாவுந்தீரும். காலை இரண்டு கறணிக மாத்திரை குடிநீரிலே கொடுக்கவும். மத்தியானம் மாலை இரவுக்கு அகஸ்தியர் ரசகற்பூரங் கூட்டிய கோரோசினைமாத்திரை, மிருதசஞ்சீவி, பிராணசஞ்சீவி முதலிய மருந்துகளைக் கொடுக்கவும். இரத்தாசயப் பெலவீன மிருந்தால் மகாஏலாதி, இரத்தினபூபதி தனித்தும் ஒருமித்தும் இஞ்சி, முலைப்பால், தேனில் கொடுக்கவும்.

**வாதக் குடிநீர்:** வாதமடக்கி, அமுக்கிராய், பறங்கிக்கிழங்கு, சீனக்கிழங்கு, வெள்ளறுகு வகை கழ. 8. நன்னாரி, சீந்தில், நிலப்பனை, இருமட்டி, சிவனார்வேம்பு, ஆடாதோடை, பெருமருந்து, கான்றை, காற்றோட்டி, உவாய், இயங்கு, நொச்சி வகை கழ. 4. திரிகடுகு, மதுரம், விளங்கம், ஏலம், இலவங்கம், அக்கரா, சிறுதேக்கு, கற்கடகசிங்கி, கண்டதிற்பலி வகை கழ. 2. 8 படி நீர் விட்டு 1 படியாக வற்றவைத்து நாள் 6 முறை குடிக்கவும். மருந்



துப் பிரயோகம் முன்குடிநீரிற் கூறியபடியே. வாதம், வாதசுரம், முடக்குப் பிடிப்பு,பொருத்துள் வீக்கம் தீரும்.

**வாதக் குடிநீர்:-** சித்தரத்தை, மிளகு, இஞ்சி, கண்டதிற்பலி, மல்லி, அதிமதுரம், கடுகுரோகணி, அக்கரா, வாய்விளங்கம், கற்கடகசிங்கி, ஓமம், ஏலம், வால்மிளகு வகை கழ. 2. பற்பாடகம், பேய்ப்புடல், சிறுதேக்கு, கோட்டம், சீந்தில், இருமட்டி, கண்டங்கத்தரி, ஆடாதோடை, நிலப்பனை, சாறணை, பெருமருந்து, சிறுநெரிஞ்சில்வேர் வகை கழ. 4. அமுக்கிராய், பிரப்பங்கிழங்கு, வெள்ளறுகு, இயங்கு, பறங்கிக்கிழங்கு, நிலவேம்பு வகை கழ. 8. 8 படி நீர்விட்டு 1 படியாக்கி நாள் 6 முறை குடிக்கவும். மருந்துப் பிரயோகம் மேற்காட்டியபடியே. காலை மருந்துக்காகக் கருப்பஞ் சாற்றுக் குளிகை கொடுத்துவருக.

### வாதத்திற்குப் பிரம்பு மூலக் கஷாயம்

பிரம்புமூலம், இயங்கு, சாறணை, அமுக்கிராய், பறங்கிக்கிழங்கு வகை கழ 4. கண்டங்கத்தரி, கொடிவேலி, தூதுவளை, வட்டு, நன்னாரி, இருசீரகம், கடுக்காய், கடுகுரோகணி, சாதிக்காய், வசுவாசி, செவ்வியம், சித்தரத்தை, திரிகடுகு, வாய்விளங்கம் வகை கழ. 2. 12 கழஞ்சுக்கு ஒருபடி தண்ணீர்வீதம் விட்டு நாலொன்றாக்கிக் கொள்க. நேரம் $1\frac{1}{2}$—2 அவு. வீதம் நாள் 4 முறை கொடுக்கவும். தேவையாயின் காலையில் 2 குளிகை கறணிகம் அல்லது வாதராட்சதன் குளிகை கொடுக்கவும். மத்தியானம் மாலை இரவுநேரங்களுக்கு அகஸ்தியர் கோரோசினைமாத்திரை, மிருதசஞ்சீவி முதலியவைகளைக் கொடுக்கவும். சுரம், பிடிப்பு, முடக்கம், உளைவு, குத்து, தாங்கொணாத வேதனையான நோ, விறைப்பு முதலியன தீரும்.

### வாதத்துக்குப் பிரம்புமூலக் கஷாயம்

சீனக்கிழங்கு, அமுக்கிராய் வகை பல. 1. இயங்கம்வேர், பிரப்பங்கிழங்கு, சாறணைவேர், கண்டங்கத்தரிவேர், கொடிவேலி, தூதுவளைவேர், வட்டுவேர், நன்னாரிவேர் வகை பல. $\frac{1}{2}$. திரிகடுகு, இருசீரகம், கடுக்காய், கடுகுரோகணி, சாதிக்காய், காரம்பு, வசுவாசி, செவ்வள்ளி, சித்தரத்தை, வாய்விளங்கம் வகை கழ. 1. செய்முறைப் பிரயோகம் யாவும் முன் கஷாயம்போல. வீக்கம் குத்துளைவு, பிடிப்பு, சுரம் தீரும்.

### சுரோணித வாதக் குடிநீர்

சித்தரத்தை, மிளகு, இஞ்சி, திற்பலி, ஏலம், அக்கரா, இருவேலி, சந்தணம், நற்சீரகம், தாளிசபத்திரி, சிறுதேக்கு, கற்கடகசிங்கி, வாய்விளங்கம், அதிமதுரம், பற்படாகம், பேய்ப்புடல், சீந்தில், கடுகுரோகணி, றோசாப்பூ வகை கழ. 2. வீளிவேர், நிலப்பனைக்கிழங்கு, பெருமருந்துவேர், பிரப்பங்கிழங்கு, கண்டங்கத்தரிவேர், இயங்கம்வேர் வகை கழ. 4. வில்வவேர், சாறணைவேர், நன்னாரி, சிவனார்வேம்பு, சிற்றமட்டி, பேரமட்டி, சிறுநெரிஞ்சில், நீர்முள்ளி இவை வேர் வகை கழ. 6. பறங்கிக்கிழங்கு, அமுக்கிராய், வகை கழ. 8. 8 படி நீர்விட்டு நாலொன்றாக்கியதில் முன்போலப் பிரயோகிக்கவும். குண்டிக்காய்ப் பெலவீனம், சலஎரிவு, சலக்குறைவு, வீக்கம், வாதப்பிடிப்பு, குத்துளைவு, கடியசுரம், மூளைப்பெலவீனம், சோர்வாதம், விறைப்புவாதம் முதலிய யாவுந் தீரும்.

### வாதப்பிடிப்பு அவியற் சுரத்துக்கு

சித்தரத்தை, மல்லி, அக்கரா, சிறுதேக்கு, அதிமதுரம், கறுவா, கண்டதிற்பலி, சீந்தில், பற்படாகம், பேய்ப்புடல், கடுகுரோகணி, வேப்பங்கூர் வகை கழ. 2. 2 படி நீர்விட்டு எட்டொன்றாக்கி நேரம் $1\frac{1}{2}$—2 அவு. வீதம் நாள் 6 முறை கொடுக்கவும். விரேசனம் பாவித்தல் கூடாது. முலைப்பால் கூட்டிக் கொடுக்க வயிற்றாலும் ஒழுங்காகப் போகும். இராசஏலாதி, சுராசசேகர வடிவு, செட்டியார் கோரோசனை மாத்திரை, சன்னிவாதசுர மிருத்தியாதிவகைகள் யாவும் இக்கஷாயத்திலே கொடுத்துவரவும்.

### வாதப்பிடிப்புடன் வயிற்றுக்கழிச்சல் சுரத்துக்கு

திற்பலி, ஏலம், சாதிக்காய், வசுவாசி, மலைதாங்கிவேர், அக்கரா, ஓமம், மாயாக்காய், வால்மிளகு, அதிவிடையம் கற்கடகசிங்கி, கராம்பு, கறுவா வகை கழ. 1. பூவரசம்பட்டை, அத்திப்பட்டை, நிலப்பனை, மாம்பருப்பு, நாவற்பட்டை, மாதாளமோடு வகை கழ. 2. முன் முறைப்படி கஷாயம் செய்து தேன்கூட்டிக் கொடுத்துவருக. முன்னைய மருந்துகளோடு கஸ்தூரி மிருத்தியாதி, தோடம்பழக் கோரோசனைமாத்திரை, இரத்தினபூபதி, மகாஏலாதி முதலியவைகளும் கொடுத்துவருக.



**செங்கண்மாரிக் குடிநீர்:-** சிற்றமட்டி, வில்வவேர், சிறுநெரிஞ்சில்வேர், செந்தாமரைக்கிழங்கு, சிறுபயறு, மல்லி, சுக்கு, நெற்பொரி, நற்சீரகம் வகை கழஞ்சு 4. செவ்விளநீர் படி 3. நாலொன்றாக வற்றவைத்து நேரம் 1—2 அவுன்ஸ் கொடுக்கவும். இவ்விதம் நாளொன்றுக்கு 6 முறை கொடுக்கவும். இதில் இராசஏலாதி, தங்கஏலாதி, சந்திராதி மாத்திரை, பூரணசந்திராதி, பெரிய பூரணசந்திராதி மாத்திரை, கற்பூரஞ் சேர்ந்த அகஸ்தியர் கோரோசனை மாத்திரை, சுராசசேகரவடிவு, மிருதசஞ்சீவி முதலிய மாத்திரைகளைக் கொடுக்கவும்.

**தீரும் வியாதிகள்:** செங்கண்மாரி, செங்கண்மாரிச்சுரம், பித்தப்பை ஈரல் முதலியவைகளிலேற்பட்ட வீக்கம், பித்தப்பைக்கல், பித்துப்பை விரணம் முதலியன தீரும்.

**செங்கண்மாரிக் குடிநீர் (வேறு):** வில்வவேர் வைரம் கழ. 2, இலாமிச்சுவேர் கழ. 8, வெட்டிவேர் கழ. 4, சந்தணச்சீவல் கழ. 4, தாமரைவளையம் கழ. 3, நற்சீரகம் கழ. 2, அதிமதுரம் கழ. 1, கோட்டம் கழ. 1, சுக்கு கழ. 1, மிளகு கழ. 1, திற்பலி கழ. 2, கொத்தமல்லி கழ. 4, சற்கரை கழ. 6. செவ்விளநீர் படி 8 விட்டு அரைவாசியாக வற்ற வைத்து எடுத்த கஷாயத்தில் 2-3 அவுன்ஸ் எடுத்து நெற்பொரித்தூள் மேற்பொடியிட்டுக் கலக்கிக் குடிக்கவும். இவ்விதம் நாள் 4—6 முறை கொடுக்கவும். இக்கஷாயத்தில் முன் மருந்துகளையும் கொடுத்துவரலாம்.

**செங்கண்மாரிக் குடிநீர் (வேறு):** முள்ளிலவம்பட்டை, பயறு, மல்லி, தேற்றாவிதை, கழற்சிவிதை, தாமரைக்கொட்டை, நிலப்பனை, கீழ்காய்நெல்லிவேர், நிலவேம்பு, கடுக்காய் வகை கழ. 5. 4 படி செவ்விளநீர் விட்டு 1 படியாக்கி நேரம் 2—4 அவு. வீதம் நாள் 4 முறை கொடுக்கவும். முன் மருந்துகளிலொன்றையும் கொடுத்துவரலாம்.

**செங்கண்மாரிக் குடிநீர் (வேறு):** முள்ளிலவம்பட்டை, வில்வவேர்வைரம், முல்லைவேர் வகை பிடி 1. மல்லி, நற்சீரகம், மதுரம், தேற்றாவிதை, நெற்பொரி, சிறுபயறு வகை கழ. 10. செவ்விளநீர் படி 8 விட்டு $\frac{1}{8}$ ஆக்கி நேரம் 1—2 அவு. 2 தேற்றாவிதை அரைத்துப் போட்டுக் குடிக்கவும். நாள் 2—3 முறை பாலுஞ்சோறும் பத்தியமிருக்கவும்.

**பஞ்சதாரைக் குடிநீர்:** ஏலம், மதுரம், நற்சீரகம் வகை கழ. 1. இஞ்சி கழ. 4. பசுப்பால் படி $\frac{1}{2}$. நீர் படி $\frac{1}{2}$. சரக்குகளை வெதுப்பி இடித்துப்போட்டு அவித்துப் பாலின் அளவு வந்தவுடன் சற்கரை போட்டுக் குடிக்கவும். பித்தவாயு, பித்தக்கொதி, பைத்தியவாயு, மேகம், தலைக்கிறுதி, தலைவலி தீரும்.

**வாத பித்த குளிர்சுரக் குடிநீர்:** கடுகுரோகணி, தேவதாரம், சந்தணம், பங்கம்பாலைவேர், பேய்ப்புடல், வேப்பலகு, பெருங் குரும்பை, அதிவிடயம், நாகம்பூ, சிறுகாஞ்சோன்றிவேர், கீழ்காய் நெல்லிவேர், சீந்தில், முத்தற்காசு, கோட்டம், சிறுதேக்கு வகை கழ. 2. 2 படி நீர் விட்டு நாலொன்றாக்கியதில் நேரம் 1—2 அவு. கஷாயம் திற்பலித்தூள் மேற்பொடியிட்டுக் கொடுக்கவும். இவ் விதம் நாள் 4–6 முறை கொடுக்கவும். வெட்டுமாறன், கோரோசினை மாத்திரை, இராசசேகரவடிவு, இராசஏலாதி, மிருதசஞ்சீவி முதலிய மருந்துகளும் சேர்த்துக்கொடுக்கலாம். குலைப்பன் குளிர் கடுமையாயிருந்தால் பெரிய வெள்ளைக் குன்றிமணிக் குளிகை, சுர கோடாலி முதலிய மாத்திரைகளைக் கோரோசினை மாத்திரை யோடு சேர்த்துக் கஷாயத்திற் கொடுத்து வரவும். முலைப்பால் கூட்டவும்.

**வாத பித்தசுரக் குடிநீர் (வேறு):** கடுக்காய், கோரைக்கிழங்கு, திற்பலிமூலம், கொத்தமல்லி, அதிமதுரம், இருவேலி வகை கழ. 2. $1\frac{1}{2}$ படி நீர்விட்டு நாலொன்றாக்கி நேரம் 2-3 அவு. நாள் 4 முறை கொடுக்கவும். முன் மருந்துகளும் கூட்டிக் கொடுக்கவும். குலைப் பன், குளிர், சத்தி, பித்தசுரம், தேகஎரிவு முதலியன தீரும்.

**கிருமிச்சுரக் குடிநீர்:** சுரைத்தண்டு, கறிப்பாலைத்தண்டு, ஈச்சங் குருகு, ஆடுதின்னாப்பாலைக்காய், கிழுவங்காய், பாவலிலை வகை பிடி 1. கடுக்காய், கடுகுரோகணி, கிருமிசத்துரு, மிளகு, வாய் விளங்கம் வகை கழ. 2. 3 படி நீர்விட்டு $\frac{3}{4}$ படியாக்கி நேரம் 1-3 அவு. கொடுக்கவும். இவ்விதம் நாள் 4 - 6 முறை கொடுக்கவும். இதில் ரசகற்பூரஞ் சேர்ந்த அகஸ்தியர் கோரோசினை மாத்திரை, பராசசேகரம் கிருமிநாச மாத்திரை, மிருதசஞ்சீவினி, இராச சேகரவடிவு, மருக்கொழுந்து மிருத்தியாதி முதலியன கொடுத்து வரவும். வயிற்றாலே போகாதுவிடின், காலை கறணிக மாத்திரை அளவறிந்து கொடுத்து விரேசிக்கவும். இனிப்பு ஆகாது.



**வயிற்றுளைவு, கிருணி, அதிசாரக் குடிநீர்:** திற்பலி, ஏலம், ஓமம், வெந்தயம், அக்கரா, மாதாளமோடு, கோரைக்கிழங்கு, மாங்கொட் டைப் பருப்பு, அதிவிடயம், வெட்பாலையரிசி, மலைதாங்கிவேர், அத்திப்பட்டை, நாவற்பட்டை, கருவேலம்பட்டை வகை கழ. 2. தனித்தனி வறுத்து 2 படி நீர் விட்டுக் $\frac{1}{4}$ ஆக வற்றவைத்துக் கொள்ளவும். நேரம் $1-1\frac{1}{2}$ அவு. கஷாயம் தேன் கூட்டி நாள் 4–6 முறை கொடுக்கவும்.

**உப மருந்துகள்:** தோடம்பழக் கோரோசினை மாத்திரை, மகா ஏலாதி, புன்னைவேர்க்குளிகை, கஸ்தூரி மிருத்தியாதி முதலியவற் றைச் சமயோசிதம் போற் சேர்த்துக்கொள்ளவும்.

**சண்டமாருதக் கருக்குக் குடிநீர்:**

"ஆமடா நீர்ப்பாடு பேய்ப்பாடு மல்லா
லசீரணத்தில் மந்தமோடு பலபேதிமிகுந்தால்
ஆமடா சண்டமா ருதங்கருக்கு
வப்பனே தும்பையோடு குப்பைமேனி
ஆமப்பா தைவேளை சமூலமாக
வஞ்சுவகை யோன்றுபெரும் பிடியதாக
ஆமப்பா சட்டியிட்டுத் தீயிலே கருக்கி
யரைச்சாம்ப லானபின்பு கோட்டிசட்டிதுடையே"

"துடைத்தசட்டி திரும்பவுந்தா னடுப்பிலேற்றித்
துடியான வேந்தயமோ முக்கழஞ்சு
உடைத்தகுள மடைப்பதுபோற் சிவக்கவறுத்தப்பா
வோருபடிதான் சலம்விட் டேட்டோன்றாக்கி
மடைத்தலைப் பாய்ச்சுவதாக வடித்துநீயருந்து
வயிறடைக்கும் பேதியோடு வாந்தியுப்பிசமும்
படைத்தவயன் போலடைக்குந் தாகம்போக்கும்
பனைப்பில்லாப் பொரித்தகஞ்சி பரிந்துகூட்டே"

**சுர அதிசாரக் குடிநீர்:** சுக்கு, ஓமம், சாதிக்காய், வெட்பாலை யரிசி, ஏலம், திற்பலி, அக்கரா, வல்லாரல், மதுரம், வசுவாசி, மல்லி, பிரமி, மாயாக்காய், கோட்டம், இலவங்கம், பொடுதலை, காரம்பு, இருசீரகம், செஞ்சந்தணம், கற்பூரவள்ளி, மாதாளம்பிஞ்சுத் தோல், தென்னங்குரும்பைக் கயர் வகை கழ. 2. வறுத்து 4 படி நீர் விட்டு $\frac{1}{8}$ ஆக வற்றவைத்து நேரம் $1-1\frac{1}{2}$ அவு. தேன் கூட்டிக்

கொடுக்கவும். கஸ்தூரி மிருத்தியாதி, மகாஏலாதி, கபாட மாத்திரை, புன்னைவேர்க்குளிகை முதலிய குளிகைகள் சேர்த்துக் கொடுக்கவும்.

**உவாந்தி விக்கலுக்கு:** நற்சீரகம், சந்தணம், ஓமம், வில்வவேர் வைரம், இருவேலிவேர், நெற்பொரி வகை கழ. 2 வறுத்தவித்துத் தேன் கூட்டி நேரம் 1–1½ அவு. வீதம் நாள் 4–6 முறை கொடுக்கலாம். மகாஏலாதி, மும்மாத்திரை, கண்டாவுடதம், இரத்தின பூபதி முதலியன சேர்த்துங் கொடுக்கலாம்.

**விக்கலுக்கு:** அரசந்துளிர், மாந்துளிர், நாவற்றுளிர், மிளகு சுட்ட சாம்பல், மயிலிறகுச் சாம்பல், கற்கண்டு வகை சமன். இஞ்சிச்சாறு, முலைப்பால் விட்டரைத்து தேனும் கலந்து நாக்கிற் பூசவும். மகாஏலாதி, இரத்தினபூபதி கூட்டிக்கொள்ளவும்,

**விக்கலுக்கு (வேறு):** மயிலிறகுச் சாம்பல், அதிமதுரம், ஏலம், திற்பலி, தாமரைவித்து, கற்கண்டு, சீனி வகை கழ. 2. வறுத்தவித்துத் தேன் விட்டுக் கொடுப்பது. இதைத் தூளாக்கித் தேனிற் குழைத்தும் கொடுக்கலாம்.

**மாருத சத்திக்கு:** மயிலிறகுச் சாம்பல், எய்ப்பன்றி முள்ளுச் சாம்பல் வகை சமன். தேன் விட்டுக் குழப்பிக் கொடுக்கவும்.

**சத்தி ஓங்காளத்துக்கு:** மதுரம், முத்தற்காசு, சுக்கு, ஏலம், திற்பலி, நெற்பொரி வகை கழ. 2. வறுத்தவித்துத் தேன் கூட்டிக் கொடுக்கவும்.

**உவாந்திக்கு:** நல்ல சாம்பிறாணி வரா. 3. நன்றாய்ப் பொடித்து ஒரு துண்டு வெண்துகிலிற் பரப்பித் திரித்துப் புதுச்சட்டியிலிட்டுத் தீயெரித்துச் சாம்பலாக்கி ½ படி நீர்விட்டு ⅛ ஆக வற்றவைத்துக் கொடுக்க எவ்வித உவாந்தியும் உடன் நிற்கும்.

**வாயால் இரத்தம் போவதற்கு:** வறுத்துக் குற்றிய பாசிப்பயற்றம் பருப்பு, பருத்திவிதைப்பருப்பு வகை சிறங்கை ¼. தேசிப்புளி, பருத்திப்பிஞ்சுச்சாறு வகைக்கு சிறங்கை ½ சேர்த்து அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும். பால் சேர்க்கவும். வெந்நீரிற் குளிக்கவும் இரத்த பித்த ரோகத்தில் வாயால் இரத்தம்போதல் தீரும்.

**வாயால் இரத்தம் போவதற்கு (வேறு):** மாதாளம்பூச் சாற்றை இரண்டு மூக்கிலும் நசியமிட கக்கலில், இரத்தபித்த ரோகத்தில் வாயால் இரத்தம் போவது நிற்கும்.



**இரத்தபித்தக் குடிநீர்:** மல்லி, இருசேர், திற்பலி, மிளகு, இருவேலி, செண்பகமொட்டு, இலாமிச்சு, வெட்டிவேர், முத்தற்காசு, நாயுருவிச்சமூலம், சீந்திற்கிழங்கு, சிறுகீரைவேர், வேப்பம் பட்டை, சந்தனச்சீவல் வகை கழஞ்சு 2. 3 படி நீர்விட்டு ⅛ ஆக வற்றவைத்து நேரம் 1 – 1½ அவு. நாள் 4 – 6 முறை கொடுக்கவும். இதில் சந்திராதி மாத்திரை, இராசஏலாதி, தங்கஏலாதி, சுராசசேகர வடிவு, மகாஏலாதி முதலிய குளிகைகள் சேர்த்துக்கொடுக்கவும்.

**இரத்தபித்தரோக உழலைக்கு:** மேற் சொல்லிய கஷாயத்தில் மதுரம், சுக்கு, நெல்லி சமன் மேற் பொடியிட்டுக் கொடுக்கவும்.

**இரத்தபித்த ரோகத்தில் வயிற்றாலே போகவேண்டியிருந்தால்:** முன் கஷாயத்தில் கற்றாளஞ் சருகு, கடுக்காய், களிப்பாக்கு சமன் மேற் பொடியிட்டுக் கொடுக்கவும்.

**இரத்தபித்த ரோகந்தில் கடிய சுரமிருந்தால்:** முன் கஷாயத்தில் பற்படாகம் கழ. 4 கூட்டிக் கொடுக்கவும்.

**இரத்த ரோகத்தில் நித்திரையில் முட்டுண்டானல்:** மேற்படி குடிநீருடன் கறுத்தக் கம்பிளி, மயிலிறகு இவை சுட்ட சாம்பல், உள்ளி, பெருங்காயம் சேர்த்து அரைத்த பொடி மேற்றூவிக் கொடுக்கவும்.

**இரத்த பித்தம் இரத்த மூலத்துக்கு:** நெல்லிவத்தல் தோலா ½. மதுரம் தோலா 1½, சரக்கொன்றைப் புளி தோலா 2. இவற்றை 1 படி நீர்விட்டு ⅛ ஆக வற்றவைத்து வடிகட்டி நேரம் 2 அவுன்ஸ் வீதம் 2 மணிக்கு ஒரு முறை கொடுக்கப் பயங்கரமான இரத்தபித்தம் இரத்தமூலம் தீரும்.

**சுரம் வாய்வுடன் கூடிய கசத்துக்கு:** நெற்பொரி, பச்சைக்கற்பூரம், மான்கொம்பு, திரிகடுகு, திரிபலை, கடுகுரோகணி, முந்திரிகை, பேரீந்து, கூகைநீறு, தேவதாரம், சிறுதேக்கு, செவ்வியம், வால்மிளகு, கோட்டம், ஏலம், இலவங்கம், சாதிபத்திரி, தாளிசபத்திரி, இலவங்கபத்திரி, நெய்தற்கிழங்கு, சந்தனம், இலாமிச்சு, இருவேலி, அமுக்கிராய் வகை கழஞ்சு 4. சிற்றமட்டி, பேரமட்டி, சிறுகாஞ்சோன்றி, கண்டங்கத்தரி, தூதுவளை, வட்டு, ஆடாதோடை,

இயங்கு, நன்னாரி, பெருமருந்து, கான்றை, நிலவேம்பு, சாயவேர், வட்டத்துத்தி, விட்டுணுகிராந்தி, சேவகன்பூடு, நீர்முள்ளி, வில்வவேர், முல்லைவேர். இவை வேர்வகை கழஞ்சு 8. குன்றிமணி, நிலவேம்பு, சிங்கிலி, கற்பூரவள்ளி, துளசி, தூதுவளை, கண்டங்கத்தரி, பேய்ப்புடல் இவை சமூலம் வகை கழ. 6. 16 படி நீர் விட்டு $\frac{1}{8}$ ஆக வற்றவைத்து நாள் 6 முறை நேரம் 1–2 அவு. வீதம் தேவையாயின் தேன் முலைப்பால் கூட்டிக் கொடுக்கவும்.

இக்கஷாயத்தில் இராசஏலாதி, கபாரசபூபதி, தங்கக்கோரோசினை மாத்திரை, சயகுலாந்தக மாத்திரை, தங்க ஏலாதி, மகா ஏலாதி, மிருதசஞ்சீவினி, சயகேசரிமாத்திரை முதலிய குளிகைகளைக் கொடுத்து வரவும்.

குறிப்பு: சேவகன்பூடு – சிவனார்வேம்பு.

**கசம் இருமல் சுரத்துக்கு:** திற்பலி, வால்மிளகு, ஆடாதோடைவேர், மிளகு, தூதுவளைவேர், சீந்தில், மதுரம், கண்டங்கத்தரிவேர், கோரைக்கிழங்கு, அக்கரா, சிறுகாஞ்சோன்றிவேர், வகை கழ 2. 2 படி நீர்விட்டு $\frac{1}{8}$ ஆக்கி முன்போற் குடிக்கவும்.

**கசம் இருமல் வயிற்றுலே போவதற்கு:** திற்பலி, வால்மிளகு, மதுரம், நன்னாரி, அதிவிடையம், கோரைக்கிழங்கு, சீந்தில், தூதுவளைவேர், கண்டங்கத்தரிவேர், சிறுதேக்கு, முந்திரிகைப்பழம் வகை கழ. 2. வறுத்து 2 படி நீர்விட்டு $\frac{1}{8}$ ஆக வற்றவைத்து முலைப்பால் தேன் கூட்டி முன்போற் குடிக்கவும். இதில் மகா ஏலாதி, காமகேசரிக் குளிகை, யானைக்கொம்பு சேர்ந்த பெரிய பூரண சந்திராதிமாத்திரை முதலியவற்றைக் கொடுக்கவும்.

**சுரம் இருமலுக்கு:** சித்தரத்தை, சீந்தில், பேய்ப்புடல், மல்லி, பற்படாகம், மதுரம், வால்மிளகு, நிலப்பனை வகை கழஞ்சு 2. 2 படி நீர்விட்டு $\frac{1}{8}$ ஆக்கி முன்போற் குடிக்கவும்.

**சுரம் இருமலுக்கு:** சித்தரத்தை, மிளகு, திற்பலி, அக்கரா, சிறுதேக்கு, மதுரம், பற்படாகம், பேய்ப்புடல், சீந்தில் வகை கழ. 2. வேப்பங்கூர், பிடி 1. 2 படி நீர்விட்டு $\frac{1}{8}$ ஆக்கி முன்போற் குடிக்கவும்.

**சுரம் இருமல் கசத்துக்கு:** சித்தரத்தை, மிளகு, அக்கரா, வால்மிளகு, சந்தனம், வெட்டிவேர், இலாமிச்சு, அறுகங்கிழங்கு, சிறு



தேக்கு வகை கழ. 2. 2 படி நீர்விட்டு $\frac{1}{8}$ ஆக்கி முலைப்பால் கூட்டி முன்போற் குடிக்கவும்.

**இருமல் சுரம் தொண்டையால் இரத்தம் போதலுக்கு:** திற்பலி, ஓமம், மதுரம், மல்லி, வால்மிளகு, சதகுப்பை, இலுப்பைப்பூ, கான்றிக்காய்த்தோல், கண்டதிற்பலி, நிலப்பனை வகை கழஞ்சு 2. 2 படி நீர்விட்டு $\frac{1}{8}$ ஆக்கி முலைப்பால் கூட்டி முன்போற் குடிக்கவும்.

**கடிய சுரம் கசரோகத்துக்கு க்ஷயக் கிருமி கொல்லிப் பொட்டளி:** மொசுமொசுக்கை, கண்டங்கத்தரி, தூதுவளை, கற்பூரவள்ளி, துளசி, விட்டுணுகிராந்தி, ஆடாதோடை, வெதுப்படக்கி, சவுக்கு, குன்றிமணி, வெற்றிலை, செம்முள்ளி இவை இலைவகை பிடி 1. இஞ்சி, சித்தரத்தை, பேய்ப்புடல், வட்டுவேர் வகை கழ. 2. யாவும் இடித்துப் பொட்டளியாகச் சீலையிற் கட்டி இடியப்பத் தட்டில் வைத்து ஓர் பானையில் 2 படி நீர்விட்டுப் பானை வாயில் மருந்தை வைத்து மூடியவித்துப் பிளிந்த சாற்றில் சிறிது முலைப்பால் தேன் கூட்டிச் சொர்ண கோரோசினை மாத்திரையும் மிருதசஞ்சீவினியும் சேர்த்துக் கொடுக்கவும். இவ்விதம் நாள் 6 முறை கொடுக்கச் சுரம் இறங்கும்; பசி தீபனமுண்டாகும்; முகந் தெளிவடையும்; நோயாளன் பெலமடைந்து நிறைகூடிவருவான்.

**க்ஷயக்கிருமி கொல்லி: (வேறு)** உத்தமாகாணி, குப்பைமேனி, இயங்கு, தூதுவளை, வட்டுக்கத்தரி, செம்முள்ளி, கண்டங்கத்தரி, துளசி, இவை இலைவகை பிடி 1. இடித்துப் பிட்டவியல் செய்து பிளிந்து தேன் காசிடை சேர்த்து முத்துப் பற்பம், பவளபற்பம், தாளகபற்பம், சொர்ண கோரோசினை மாத்திரை, க்ஷயகுலாந்தக மாத்திரை, கபாரசபூபதி முதலியவைகளைக் கொடுக்கவும்.

குறிப்பு:- மேற்படி மூலிகைகளைத் தனித்தும் ஒருமித்தும் வசதிக்குத் தக்கபடி பச்சைச் சாறுகவும் புட்டவியல் செய்து பிளிந்தும் தேன் கூட்டிக் கொடுக்கவும்.

**கசத்தில் இரத்தம் கக்கினுல்:** அதிமதுரம், நெல்லிவற்றல், சீந்தில், வகை கழ 2. தான்றிக்காய்த்தோல் கழ. 4. $\frac{1}{8}$ ஆகக் கஷாயஞ் செய்து சுராரசசேகரவடிவு, தங்கஏலாதி, மகாஏலாதி, இரத்தினபூபதி, கபாரசபூபதி முதலியவைகளைக் கொடுத்துவரவும்.

**கசத்தில் இரத்தங் கக்கினுல் :** திற்பலி, சுக்கு, முந்திரிகை, பேரீந்து, வகை கழ. 1. வில்வவேர், கோரைக்கிழங்கு, நாவல்வேர், நீர்ப்புல்லாந்திவேர், சிறுகாஞ்சோன்றிவேர், தான்றிக்காய்த்தோல் வகை கழ. 2. $\frac{1}{8}$ ஆகக் கஷாயஞ்செய்து தேன் கூட்டி முன்போலக் கொடுத்துவரவும்.

**இருமல் தொய்வுக்குக் கஷாயம்:** சித்தரத்தை, மிளகு, அதிமதுரம், வால்மிளகு, வட்டுவேர், நாயுருவிவேர், கற்பூரவள்ளியிலை, குன்றுமணியிலை, தூதுவளையிலை வகை கழ. 2. $\frac{1}{4}$ ஆகக் கஷாயம் செய்து முலைப்பால் கூட்டிக் கொடுக்கவும்.

**இருமலுக்கு:** மிளகு, நற்சீரகம், மதுரம் வகை கழ. 2. வறுத்தவித்துக் கல்லாக்காரமிட்டுக் குடிக்கவும்.

**சுரம் தொய்வுக்கு:** சித்தரத்தை, மிளகு, இஞ்சி, கண்டதிற்பலி, இருசீரகம், சிறுதேக்கு, வெந்தயம், திரிபலை, கற்கடகசிங்கி, வெட்பாலை, செவ்வியம், கண்டங்கத்தரி, வில்வவேர், வட்டுவேர், ஆடாதோடைவேர், இயங்கம்வேர், சிறுநெரிஞ்சில்வேர், சாறணைவேர் வகை கழ. 2. 4 படி நீர்விட்டுக் $\frac{1}{4}$ ஆக்கி நேரம் 1 – 2 அவு. கஷாயத்தில் முலைப்பால்கூட்டிக் கொடுக்கவும். தொய்வு மிறுத்தியாதி, மருக்கொழுந்து மிறுத்தியாதி, கோரோசினை மாத்திரை, இராசஏலாதி முதலிய குளிகைகளும் சேர்த்துக் கொடுக்கவும்.

**பெரிய ஈரவுள்ளிக் குடிநீர்:** தூதுவளை, கண்டங்கத்தரி, சாறணை, மூக்கறைச்சி, சிற்றவரை, வீழி, விழாத்தி, கொவ்வை, புங்கு, சிறுகுறிஞ்சி, சிறுகாஞ்சோன்றி, குன்றுமணி, இயங்கு, பிரண்டை, சிற்றமட்டி, இன்பூறல், வட்டு, நாயுருவி, நீர்முள்ளி, பிராய், நன்னாரி, கொடிவேலி, பஞ்சபாண்டவர்முல்லை, நொச்சி, காண்டை, பைங்குராய் இவை வேர்வகை பிடி 1. பூதவிருக்கம் பலம் 1; ஈரவுள்ளி பலம் 3; கடுக்காய் பலம் 3; தான்றிக்காய் பலம் 5. களிப்பாக்கு கருஞ்சீரகம், வெளுத்தற்பிசின் வகை கழ. 1. நற்சீரகம், ஓமம் வகை கழ. 2. திற்பலி, சுக்கு வகை கழ. 3. தண்ணீர் படி 8 கோசலம் படி $\frac{1}{4}$; வெள்ளாட்டுச் சலம் $\frac{1}{4}$ நாலொன்றுக்கி நேரம் 2 – 3 அவு. நாள் 4 – 6 முறை குடிக்கவும். முன் குளிகைகள் சேர்த்து முலைப்பால் கூட்டியுங் குடிக்கலாம்.

**தீரும் வியாதி:** காயாசுவாதம், தொய்வு, முட்டு, நாவரட்சி, வீக்கம், சுரம், மகோதரம், கரப்பன், இழுப்பு, இருமல், தீரும்.



## மந்தாரகாசக் குடிநீர்

ஆடாதோடை, தூதுவளை, இயங்கு, வட்டு, செங்கத்தாரி, நாயுருவி. இவை வேர் வகை கழ. 8. திற்பலி, கோட்டம், ஏலம், சுக்கு, மிளகு, நாவற்துளிர், ஆலம்முகை, இலாமிச்சுவேர், கண்டங்கத்தரிவேர் வகை கழ. 3. 6 படி நீர்விட்டு நாலொன்றுய்க் காய்ச்சி நேரம் $1\frac{1}{2}$—2 அவு. வீதம் சீனி போட்டுக் குடிக்க. தொய்வு, நெஞ்சடைப்பு, இருமல், காய்ச்சல், நோ, மேல்மூச்சு இவை தீரும். தேவையாயின் மகாஏலாதி கற்பூரஞ் சேர்ந்த பெரிய கோரோசனை, மாத்திரை, கபராசபூபதி மிருதசஞ்சீவினி தொய்வு மிறுத்தியாதி தானகமெழுகு முதலிய மருந்துகள் கூட்டி தேன்சேர்த்துக் குடிக்கலாம்.

## பித்தகாசக் குடிநீர்

சுக்கு, திற்பலி, மிளகு, மதுரம், கோட்டம், சித்தரத்தை, பேரரத்தை, இருவேலி, கராம்பு, கற்கடகசிங்கி வகை கழ. 1. ஆடாதோடை, தூதுவளை, கண்டங்கத்தரி, வட்டு, இயங்கு, சீந்தில் சாயவேர், நிலக்குமிழ் இவை வேர் வகை பிடி 1. 4 படி நீர் விட்டு நாலொன்றாக வற்ற வைத்து திற்பலித்தூள் மேற்பொடி தூவி, தேன் முலைப்பால் கூட்டிக்கொடுக்கவும். முன் குடிநீரின் கீழ்ச் சொல்லிய மருந்துகள் கூட்டியுங் கொடுக்கலாம்.

## சலக்கடுப்புக் குடிநீர்

தேற்றுவிதை, வால்மிளகு, நற்சீரகம், வகை கழ. 3. சிறுநெரிஞ்சில்வேர் பிடி $1\frac{1}{2}$ (6 கழ.) 2 படி நீர் விட்டு நாலொன்றுக்கிக் குடிக்கவும். தீராவிட்டால் தண்ணீருக்குப் பதில் செவ்விளநீர் விட்டவித்துக் குடிக்கவும்.

சிங்கிபஸ்பம், இராசஏலாதி, தங்கஏலாதி, மிருதசஞ்சீவினி, முதலிய மருந்துகளைக் கூட்டிக் கொடுக்கவும். எவ்வித எரிவு, சலஅடைப்பு, கடுப்புந் தீரும்.

## நீர்க்கடுப்பு, பிரமியம், இரத்தப்பிரமியம் கூடுவிழ

நற்சீரகம், சந்தனம், நெல்லிவற்றல், இஞ்சிச்சாறு, பச்சைவெண்ணெய் தேசிப்புளி. இவை வகை சமன். இளநீர் முகந் திறந்து மருந்து போட்டு வரிந்து கட்டித் தாட்டுச் சுட்டெடுத்து 3 நேரம் குடிக்கவும்.

பிரமியம், நீர்ப்பிரமியம், கற்பிரமியம், சீழ்ப்பிரமியம், இரத்தப் பிரமியம், பித்தவெட்டை, பிரமேகம், பித்தசுரம், கைகாலுளைவு, எரிவு, வெப்பு, பொருமல், வெட்டைவாய்வு, கிறுகிறுப்பு, முட்டுத் தொய்வு தீரும். கூடு விழும்.

## சல அடைப்புக்கு

சிறுநெருஞ்சில்வேர், வெள்ளரிக்கொட்டை, நற்சீரகம், உலுவா, மணித்தக்காளிவிதை, நண்டுக்கல், பொரித்த சீனக்காரம், கொண்டற் றுளிர், பிரமி, திரிபலை, உவருப்பு, இந்துப்பு, கடுகுரோகணி, அல்லிக்கிழங்கு, சாறணைவேர், ஓமம், கடுக்காய்ப்பூ, கறியுப்பு, மருக்காரைக்காய், புனலைப்பழம், அக்கரா, சிறுசின்னிவேர், நெற்பொரி, எலிச்செவிச்சமூலம், நிலபாகல், நீர்முள்ளி, அறக்கீரை, சுரையிலை, தேற்றுவிதை வகை கழ. 4. 3 படி நீர்விட்டு நாலொன்றுக்கிக் கொடுக்கவும். பொரிகாரம் பொரித்து மேற்பொரி போடவும். சல அடைப்பு, கல்லடைப்பு, மலக்கட்டு, சலஎரிவு தீரும்.

இராசஎலாதி, தங்கஎலாதி, மிருதசஞ்சீவினி, வெடியுப்புப் பஸ்பம், நண்டுக்கற்பஸ்பம், முதலிய மருந்துகள் சேர்த்துக் கொடுக்கவும்.

**குறிப்பு :—** சீனக்காரம், பொரித்து வைத்துக்கொள்ளவும். நண்டுக்கல்லை முலைப்பாலில் அல்லது பன்னீரில் அரைத்து எடுக்கவும். குடிக்கும்போது இவைகளைக் கொஞ்சங் கொஞ்சம் சேர்த்துக் குடிக்கவும்.

## மூத்திரக்கிரந்திச் சலஅடைப்புக் குடிநீர்

வாளிபரிசி கழ. 14. மதனகாமியப்பூ, நாகம்பூ, ரோசாப்பூ மொட்டு, வால்மிளகு, கடுக்காய், கார்போகவரிசி, கருஞ்சீரகம், வெற்றிலைக்காம்பு. வகை கழ. 2. செவ்வரத்தம்பூ கழ. 10, குங்குமப்பூ கழ. 2, கோரோசனை கழ. $\frac{1}{2}$.

செவ்வரத்தம்பூ, குங்குமப்பூ, கோரோசனை நீங்கலாக ஏனையவைகளை 2 படி நீர்விட்டு நாலொன்றுக்கி, நேரம் 2 அவு. கஷாயத்தில் குங்குமப்பூக் குளிகையிட்டு கலக்கிக் கொடுக்கவும். குங்குமப்பூ கோரோசனையுடன் செவ்வரத்தம்பூவை மேற்படி குடிநீரிலரைத்து எட்டுக்குளிகை செய்யவும். நாள் நாலுமுன்று குடிக்கவும்.



தசையடைப்பு, கல்லடைப்பு, மூத்திரத்தாரை வீக்கம், சலப்பைவாய் கிரந்தியாற் கோணுதலால் வந்த சலஅடைப்புத் தீரும். அபானவாயு நல்லாய் வெளிவரும்.

## மதுமேகசுரக் குடிநீர்

சித்தரத்தை, சீந்தில், கற்கடகசிங்கி, மிளகு, திற்பலி, கண்டங்கத்தரிவேர், நிலப்பனை, கோரைக்கிழங்கு, திரிபலை, கடுகுரோகணி, போஸ்தக்காய் வகை கழ. 2. நாவற்பட்டை, அத்திப்பட்டை, மருதம்பட்டை, வேப்பம்பட்டை, கொன்றைப்பட்டை, கடலழிஞ்சிப் பட்டை, ஓரிதட்தாமரை, ஆவரைப்பஞ்சாங்கம். வகை கழ. 4. 6 படி நீர்விட்டு நாலொன்றுக்கி நேரம் 2—4 அவு. வீதம் நாள் 4—6 முறை குடிக்கவும். மகாஎலாதி, மிருதசஞ்சீவினி, மகாபூரண சந்திராதி, வச்சிரகபாட மாத்திரை முதலியவைகளும் கொடுத்துவரலாம்.

**தீரும் வியாதி** சலத்திலுள்ள சீனியைக் குறைக்கும். சுரம், தாகம், இருமல், சலசன்னி, அவிபற்சுரம் முதலியன தீரும். சலமும் குறையும்.

## மதுமேகசுரக் குடிநீர் (வேறு)

நாவற்பட்டை, மருதம்பட்டை, கோரைக்கிழங்கு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கட்டுக்கொடி, போஸ்தக்காய், கடலழிஞ்சிற்பட்டை, ஆவரைப்பட்டை, ஆவரைப்பூ, ஆவரைவேர்ப்பட்டை. வகை கழ. 8. இவைகளைச் சூரணித்து வேளைக்கு ஒரு ரூபாயிடை சூரணத்தை $\frac{1}{4}$ படி தண்ணீரிலிட்டு $\frac{1}{8}$ படியாக வற்றவைத்து வடித்துச் சாப்பிடவும். இவ்விதம் நாள் 4 முறை கொடுக்கவும்.

இக்கஷாயத்தில் மகாஎலாதி, வச்சிரகபாடக்குளிகை, மகாபூரண சந்திராதி முதலிய குளிகைகளையும் கொடுக்கவும்.

**தீரும் வியாதி** தாகம், சுரம், அதிகசலம் போதல், சலத்திற் சீனியுண்டாதல், தேகஅழலை, கால்கையெரிவு தீரும்.

## சலரோகிகள் விரேசனக் குடிநீர்

கடுக்காய் இரு. $\frac{1}{2}$, தான்றிக்காய் இரு, $\frac{1}{4}$, நெல்லிவற்றல் இரு. $\frac{1}{4}$, இவைகளை இடித்துச் சூரணஞ்செய்து வேளைக்கு 2 தோலா சூரணத்தை $\frac{1}{2}$ படி நீரிலிட்டு $\frac{1}{8}$ படியாக வற்றவைத்துச் சிறிது பனங்கட்டி கூட்டிக் குடிக்க இருமுறை நன்கு விரேசனமாகும்.

**தீரும் வியாதி** மலச்சிக்கல், சுரம், மயக்கம், கெட்ட மணமாக வாயுப்பறிதல் சலத்திலேற்பட்ட சர்க்கரைச் சத்து முதலியன தீரும்.

இது மதுமேகிகளுக்கு ஓர் வரப்பிரசாதம் என்றே சொல்லத் தகும். இதற்கு நிகரான வேறோர் மருந்தைச் சொல்ல முடியாது.

## சலரோகிகள் வயிற்றெரிவுக்குக் குடிநீர்

தேற்றுங் கொட்டை யொருபலத்தைச்
செறிய விளநீர் தனிலவித்து
மாற்று யரைத்து மறுபடியும்
மதிப்பா யிளநீரிற் குடிக்கில்
வேற்றும் வெட்டை சலக்கழிச்சல்
வெப்புச் சலமும் மாறிவிடு
முற்று மேய சலக்கழிச்ச
லுடனே யகலு முண்மையிதே.

சீந்திற் தண்டை வறுத்திடித்துத்
திடனு யிளநீர் விட்டவித்துச்
சாந்த பசுவின் வெண்ணெயிட்டுத்
தறுகா திதனைக் குடித்துவரில்
ஏந்து பித்தம் வயிற்றெரிவு
யிடருஞ் சத்தி யோங்காளம்
காந்தி யெரிவு மழல்வாதங்
கரிந்தே யோடி யகன்றிடுமே.

## சலரோகக் குடிநீர்

அத்தியுடன் நாவல்கட லழிஞ்சிற்பட்டை
யதினிரட்டி கொன்றையா விரையின்பட்டை
இத்தனையு மிராவடுப்பி லூறவைத்து
இதமாக வசனஞ்செய் திருக்குந்நேரம்
மைத்தவளுங் குழல்மடவாய் வடித்தநீரை
வகையாக வந்திசந்தி குடிப்பீராகில்
கொத்தவிழும் மலரயன்றன் குறித்தநாளில்
கோல்வதன்றி நீரிழிவு கொல்லாதென்னே.



## நீரிழிவுக்குக் குடிநீர்

கடுக்காய் நெல்லி யதிமதுரம்
கடலழிஞ்சி யாவிரம்வேர்
மிடுக்காஞ் சுக்கு நாவலத்தி
மிக்க கருவேல் செங்கழுநீர்
அடுக்காம் வெள்ளைக் குன்றிமணி
யதனும் மலாக்காய்ச் சந்தனமே.

சந்த முறும்பே ரீந்துக்கனி
தனி முந்திரிகை சாரந்தகனி
முந்த யிவையோன் றேருநிறையாய்
முடாவி லவித்துக் குடித்துவரிற்
தோந்த பெருநீர் வாதசலம்
சொல்லும் பித்த சலவெட்டை
வந்த தாகம் நாவரட்சி
மாறுச் சலமும் மாறிடுமே.

இந்தக் கஷாயத்திற் தேன்கூட்டி மகாஏலாதி, வச்சிரக்கபாடக் குளிகை கொடுத்து வரவும்.

## பெரும்பாட்டுக்குக் குடிநீர்

வெந்தயம், ஓமம், நற்சீரகம், கடுக்காய், களிப்பாக்கு, மாயாக்காய், காசுக்கட்டி, தென்னங்குருமபைக் கயர், அத்திப்பட்டை, நாவற்பட்டை, கருவேலம்பட்டை. வகை கழ. 2. வறுத்து 2படி நீர் விட்டு ½ படியாக வற்றவைத்து நேரம் 1—2 அவு. குடிநீரிற் தேன் விட்டுக் கொடுக்கவும்.

மகாஏலாதி, இரத்தினபூபதி கஸ்தூரி, மிருத்தியாதி முதலிய மருந்துகள் சேர்த்துக் கொடுக்கவும். நாள் 4—6 முறை கொடுக்கவும்.

**தீரும் வியாதி** பலவித துவாலையடித்தலும் சுரமும் தீரும். விரேசன மருந்துகள் பாவித்தல் கூடாது.

## சுரம் இல்லாத பெரும்பாட்டுக்கு

முத்திய நாவற்பட்டையை மோர் விட்டிடித்துப் பிளிந்து 3—6 அவு. நாள் இருமுறை கொடுக்கவும்.

## பெரும்பாட்டுக்கு

கருவாளைக்கிழங்கு, ஆத்திப்பட்டை, அத்திப்பட்டை, நாவற் பட்டை, தென்னம்பாளை, காசுக்கட்டி. வகை கழ. 2. ஒருபடி நீர் விட்டு 12 மணித்தியாலம் ஊறவிட்டு நாலொன்ருக வற்ற வைத்து காலை மாலை ஒரு கழஞ்சு தேன் கூட்டிக் குடிக்கவும். ஒவ்வோர் நாளும் புதிதாகச் செய்து கொள்ள வேண்டியது. குங்குமப்பூவும் கூட்டிக் கொடுக்கலாம்.

மகாஏலாதி இக்குடிநீரில் மத்தியானம் இரவுக்குக் கொடுத்து காலை மாலை தேனில் வைத்தியாச சிந்தாமணியிற் சொல்லிய காந்த செந்தூரம் (இது கரிப்பான் சாற்றிற் காந்தத்தை உருக்கிச் சாய்த் துப் பின் புடமிட்டெடுப்பது) கொடுத்துவர, கடினமான பெரும் பாட்டு ரோகங்கள் தீரும்.

## வீக்கக் குடிநீர்

வீக்கமென்ற வகைக்கெல்லாங் குடிநீரோன்று
விளம்புகின்றேன் எருமைமுல்லை கறியின்முல்லை
கோக்குலத்துப் பஞ்சபாண் டவரின்முல்லை
குலவியங்கு சுரைச்சருகு வெளவுலோட்டி
தேக்குநீர் முள்ளியொடு பிரமிதானும்
திகழ்பீச்சு விளாத்தியிலை சமனய்க்கொண்டு
எக்கமற வட்டுநா யுருவிவேரும்
இனியதோரு கடுக்காயு மிட்டுக்காச்சே.

காய்ச்சுவாய் நாலொன்ருய்க் காய்ந்தபோது
கியாழமதை யிறுத்தேடுத்து வுள்ளேகொள்ளில்
பேச்சுமுட்டாம் சுரவீக்கம் பிள்ளைவீக்சம்
பெரிதான பாண்டுவினல் வந்தவீக்கம்
வாச்சுதேடா யிந்தமுறை யாருஞ்சொல்லார்
வழுவாது சொல்லிவிட்டேன் மகிழ்ந்துசெய்யில்
போச்சுதேடா யிக்குடிநீர் குடித்தபோதே
போதியமலை முனிவருரை பொய்யாதன்றே.



## வீக்கத்துக்குக் கோசலக் குடிநீர்

சிற்றமட்டி, சிந்திற்றண்டு, வெள்ளைச்சாறணை வேர் வகை பல. $\frac{1}{2}$, வெள்ளைக் குந்திரிக்கம், மிளகு, சுக்கு, உள்ளி வகை கழ. 2. கடுக்காய்த்தோல் கழ. 18. நாளி கோசலத்தி லூறப்போட்டு அத ஞேடு 2 படி நீர்விட்டுக் காய்ச்சி நாலொன்ருக எடுத்து நேரம் 2—3 அவுன்ஸ் வீதம் நாள் 4—6 முறை குடிக்கவும்.

இதனேடு மிருதசஞ்சீவினி, இராசஏலாதி மத்தியானம் மாலை வேளைகளிலும், காலையில் கருப்பஞ் சாற்றுக் குளிகையும் சேர்த்துக் கொடுக்கலாம்.

## வீங்கு கரப்பன் குடிநீர்

நீர்முள்ளி, நீர்நொச்சி, பீச்சுவிளாத்தி, எருமைமுல்லை, வீளி, பிரமி, கருவேலமிலை, கற்ருளஞ்சருகு, முத்தற்காசு, கடுக்காய், இந் துப்பு, கொட்டைப்பாக்கு, மல்லி, கடுகுரோகணி, திற்பலி, பூத விருக்கம் வகை கழ. 2. முன்னைய 8 வகைகளும் வகை பிடி 1. 3 படி நீர்விட்டு நாலொன்ருக வற்றவைத்து நேரம் $1\frac{1}{2}$—2 அவு. நாள் 6 முறை குடிக்கவும். முற்குடிநீரிற் கூறப்பட்ட மருந்துகளையுஞ் சேர்த்துக் குடிக்கவும்.

## வீக்கக் குடிநீர்

பீச்சுவிளாத்தி, சுரையிலை, நீற்றுப்பூசினியிலை, நீர்முள்ளி, கையாந்தகரை, நிலபாவலிலை, வெளவுலொட்டி வகை பிடி 1. கடுக் காய், உள்ளி, திற்பலி, சுக்கு, மல்லி, பொரிகாரம் வகை கழ. $1\frac{1}{2}$ சீனக்காரம், கொட்டைப்பாக்கு வகை கழ. 2. கருஞ்சீரகம் கழ, 3 கிட்டம் கழ. 8, கோசலம், தண்ணீர் வகை படி 2 நாலொன்ருக்கி நேரம் $1\frac{1}{2}$—2 அவு. வீதம் நாள் 4 முறை குடிக்கவும். தீராத காமாளை, பாண்டு, சோகை, மகோதரம், வீக்கம் மாறும். முன் மருந்துகளும் சேர்த்துக் குடிக்கலாம்.

## சகல வீக்கத்துக்கும் பெரிய குடிநீர்

பிரமி, வல்லாரை, சுரையிலை, நீர்முள்ளி, முட்கீரை, சிறுநெருஞ் சில்வேர், கிரந்திகள்நாயன், விட்டுணுகிராந்தி, கற்பூரவள்ளி, கற்ரு ளஞ்சருகு, நிலபாவலிலை, எருமைமுல்லை, பஞ்சபாண்டவர் முல்லை, வெளவுலொட்டி, பீச்சுவிளாத்தி, கையாந்தகரை, வீழியிலை, கடுக்

காய்த்தோல், ஈயவெண்காயம் வகை பிடி 1 கடுகுரோகணி, இருசீரகம், பெருஞ்சீரகம், வால்மிளகு, நாயுருவிவேர், மல்லி, களிப்பாக்கு வகை கழ. 2 புளியம்பொருக்குச் சாம்பல், ஆண்பனைப்பாளைச் சாம்பல், கிட்டம் வகை கழ. 8. வெள்ளைநெல் உமி கழ. 16, கோசலம் படி ½, தண்ணீர் படி 6, நாலொன்றாக வற்றவைத்து முன் குடிநீர் குடித்தது போலக் குடிக்கவும். வெண்காரம், பொரிகாரம், சீனக்காரம், இந்துப்பு, வகை கழ. 2 பொரித்துப் போடவும்.

## வீக்கத்துக்குக் குடிநீர்

தூதுவளை, துளசி, இபங்கு, சிறுகாஞ்சென்றி, செருப்படி, நீர்முள்ளி, செம்முள்ளி, மிளகுதக்காளி, சுரை, பிரமி, பொடுதலை, வெளவுலொட்டி, பாண்டவர்முல்லை, ஈரவெண்காயம் வகை பிடி 1. திற்பலி கழ. 2, ஓமம் கழ. 3, கடுகுரோகணி, கருஞ்சீரகம் வகை கழ. 4, பெருஞ்சீரகம், இந்துப்பு வகை கழ. 2, பொரிகாரம் கழ. 2, கோமயம் பிளிந்தது படி 2, வெள்ளைநெல் உமி படி 1, தண்ணீர் படி 4 நாலொன்றாக வற்றவைத்துக் குடிக்கலாம்.

## பாண்டுவீக்க மண்டூரக் குடிநீர்

சங்கு நெரிஞ்சில் சாரணை கோவை தன்னோடு நீர்முள்ளி
தான்றிகடுக்காய் புளியிலை நெல்லி தாரேனும் வேப்பந்தோல்
மங்கிய கிட்ட மிரும்பி னரைபோடி மஞ்சள் நன்னாரி
வழுதலை கொன்றை விழுதி குமாரி மணலி சுணக்கொடியும்
பங்கம்பாளை செங்கத்தாரி பாதிரி குறிஞ்சாவும்
பழகிய காடி கோசலம் விட்டே பாகம தெட்டொன்றாய்
பொங்கிய குடிநீ ரானது பருகப் போருமலும் வீக்கமுடன்
போதவயிற்றுக் கட்டியு முப்பலும் போடியாகுந் தானே.

குமாரி - கற்றாளைவேர் அல்லது சருகு. மணலி - ஓர் கீரைக் கொடி. கோசலம் புளித்தநீர் வகை படி 4, நேரம் 1—1½ அவு. நாள் நாலு முறை புளிபுகை உப்புத்தள்ளவும்.

4198
C.C
118682

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.